# பல்லவம்

இதழ் – 04

"அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு"



வெளியீடு

பல்லவராயன்கட்டு பொது நூலகம்

பூநகரி, கிளிநொச்சி

2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவம்

## இதழ் 04

"அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு"



வெளியீடு
பல்லவராயன்கட்டு பொது நூலகம்
கிளிநொச்சி
2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மலர் | : | பல்லவம் |
| உரிமை | : | ஆலோசனைக்குழு<br>பல்லவராயன்கட்டு பொது நூலகம் |
| பதிப்பு | : | டிசம்பர் - 2022 |
| பிரதிகள் | : | 50 |
| வெளியீடு | : | நூலகர்<br>பல்லவராயன்கட்டு பொது நூலகம் |
| அச்சுப் பதிப்பு | : | Star Advertising |
| அலகொன்றின் செலவு | : | 1000/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

எமது பூநகரிப் பிரதேச சபையின் பல்லவராயன்கட்டு பொது நூலகத்தின் வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வருடந்தோறும் வெளியிடப்படும் பல்லவம் சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பிரதேசத்தில் இலக்கிய ஆர்வலர்களின் ஆக்கங்களை தன்னகத்தே கொண்டு வெளிவரும் இச்சஞ்சிகைமிக்க மகிழ்வைத் தருகின்றது. அனைத்து வளங்களையும் கொண்ட தனித்துவமாக இயங்கும் இந்நூலகத்தினை எமது பகுதியில் உள்ள மக்கள் முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

தொடர்ந்து இச்சஞ்சிகை பல்வேறு ஆக்கங்களோடு சிறப்பாக வெளிவர எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிக்கின்றேன்.

**சிவஞானம் சிறீதரன்**
பாராளுமன்ற உறுப்பினர் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பூநகரி பிரதேச சபையின் கீழ் இயங்கிவரும் பல்லவராயன்கட்டு பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழாக பல்லவம் சஞ்சிகை வெளியிடப்படுகின்றது. "பல்லவம்" சஞ்சிகையின் நான்காவது இதழிற்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வாசிப்பு எமது பிரதேசத்தில் இலை மறை காயாக இருக்கின்ற எழுத்தாளர்களின் ஆற்றல்களை வெளிக்கொண்டுவரும் "பல்லவம்" சஞ்சிகை ஒவ்வொரு வருடமும் சிறந்த ஆக்கங்களோடு மலர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன்**
தவிசாளர்,
பூநகரி பிரதேச சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

"கண்ணுடையார் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

என்று உலகப் பொதுமறை விளம்பி நிற்கின்றது கல்வி கரையில்லாதது. அழிவில்லாதது. இத்தகு கல்வியை அற்புதமாகப் பெறக்கூடிய ஒரு இடமாக நூல் நிலையங்கள் விளங்குகின்றன. நூலக சேவை உன்னதமானது. உயர்வானது இப்பணியினை வழங்கி நிற்கும் பிரதேச சபைகளில் பூநகரிப் பிரதேச சபையின் பல்லவராயன்கட்டு பொது நூலகமும் ஒன்றாகும்.

பல்துறை வாசகர்களுக்கும் தேவையான வகை வகையான நூல்களின் சேமிப்புக் களஞ்சியமாக இந்நூல் நிலையங்கள் விளங்குகின்றன. என்றால் தவறாகாது. மாணவர்களுக்குத் தேவையான அனைத்து விதமான நூல்களுக்கும் முன்னுரிமையளிப்பதில் பிரதேச சபை நூலகங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன.

அந்தவகையிலே பல்லவராயன்கட்டு பொது நூலகமானது தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வருந்தோறும் போட்டிகளை நடாத்தி பரிசில்களை வழங்கி ஊக்குவிப்புக்களைச் செய்து வருவதுடன் சிறந்த ஆக்கங்களை ஆவணப்படுத்தும் நோக்காக "பல்லவம் இதழ்" 04 சஞ்சிகையினை வெளியிட்டு வருவதையிட்டு பெருமையும் உவகையும் அடைகின்றேன்.

கிடைக்கும் வளங்களின் உச்சப் பயன்பாட்டோடு கல்வித்துறைசார்ந்த களங்கமற்ற பணியினை முன்னெடுத்து சஞ்சிகையினையும் வெளியீடு செய்யும் இவ்வேளையில் பிரதேச சபை கௌரவ தவிசாளர், செயலாளர், உத்தியோகத்தர்கள், நூலகர், நூலக உதவியாளர்கள், பணியாளர்கள் அனைவரையும் வாழ்த்தி சஞ்சிகையானது தொடர்ந்து வெளிவந்து பயனளிக்க எனது உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ப. சத்தியராகவன்**
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

வாசிப்பதனால் மனிதன் பூரணமாகின்றான் என்பது உலகறிந்த உண்மை. காலத்தைக் காட்டும் கண்ணாடியாக வாழ்வை வாழ வழிகாட்டும் வழிகாட்டியாக நூல்கள் விளங்குகின்றன. இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞான நவீன சாதனங்களால் வளர்ச்சிப் போக்கில் வாசிப்பு என்பது எம்மிடையே மிகவும் அருகிவருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. எந்நேரமும் கைத்தொலைபேசியில் சமூக ஊடக மேய்ச்சலில் இளந்தலைமுறை மூழ்கிக் கிடக்கின்றது. இன்றைய சமுதாயத்தில் கதை, கட்டுரை, கவிதை போன்ற ஆக்கங்கள் எழுதுவதிலும் வாசிப்பதிலும் ஈடுபாடு குறைந்து அதிலும் அச்சு ஊடக வாசிப்புப் பழக்கம் இளம் பிராயத்தினரிடையே குறைந்து இலத்திரனியல் சாதனங்களின் பாவனை அதிகரித்துள்ளது. இதனை கருத்தில் கொண்டு தேசிய ஆவணமாக்கல் சபை நாடளாவிய ரீதியில் ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதத்தினை வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்த வாசிப்பு மாதத்தினை சார்ந்து பூநகரி பிரதேச சபையின் பல்லவராயன்கட்டு பொது நூலகத்தினால் வாசிப்பு பழக்கம் மீதான நாட்டத்தை அதிகரிக்கவும் மிக முக்கியமாக இளம் சமுதாயத்தினரின் அறிவையும், ஆற்றலையும், ஆளுமையையும் வெளிக்கொணர்ந்து அவர்களையும் ஒரு கலைஞராக அடையாளப்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட ஓர் ஆவணப்பதிவாக பல்லவம் சஞ்சிகை தனது இதழ் - 04 வெளியீட்டினை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாண்டும் வெளியிடப்படுகின்ற பல்லவம் இதழானது நல்ல அறிவுசார் ஆக்கங்களை சுமந்து வருவதுடன் மாணவர்களிடையே புதைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக்கொண்டு வரும் ஒரு களமாக அமைந்துள்ளது என்பதில் பெருமகிழ்ச்சியடைவதுடன், இந்தப் பணியை செம்மையுற செய்யும் நூலகசேவை வளரவும் பல்லவம் நறுமணம் கொண்டு வீசவும் எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**இரத்தினம் தயாபரன்**
செயலாளர் - பூநகரி பிரதேச சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

எங்கே ஒரு நூலகம் கட்டப்படுகின்றதோ அங்கே ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது" என்பர். அத்தகு சிறப்புடையவை நூலகங்கள் என்றால் தவறிருக்க முடியாது. சமுதாயத்தை சிந்திக்கத் தூண்டும் சாதனங்களில் நூல்களுக்கு இணை எதுவுமேயில்லை. வாசகர் ஒருவர் கேட்கும் நூல்களை விரைவாக அவர்தம் கரங்களில் சேர்க்கும் அற்புதமான பணிதனை உள்ளூராட்சி மன்றங்களின் நூலகங்கள் வழங்கி நிற்கின்றது என்பது எமக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

பல்லவம் வருடந்தோறும் பூத்து வருகையில் மனதில் புதுத்தெம்பு வரும். தேடலுள்ள உயிர்களின் வளர்ச்சிக்கு உதவும் சஞ்சிகைகளின் வருகை அவசரமாக கருத்துக்களை வாசித்து உள்கொள்ள உதவும் என்பதால் தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என இறைவனை வேண்டுவோம்.

அன்பும் அறனும் பண்பும் பாசமும் வளர வாசிப்பை நேசிப்போம். அதற்கென்றே ஒருநாளில் சிறு பொழுதையாவது ஒதுக்கப் பழகவேண்டும். நூலகத்தை நாடிவரும் வாசகர்களுக்கு இச்செய்தியினை அறிவுறுத்துவதும் நூலகர்களின் பணியெனக் கொள்ள வேண்டும்.

நாம் வாழும் சூழல் நலமாக அமைய நல்ல நூல்களை இனங்காட்டி வாசிக்கத் தூண்டுவோம். இப்பெரும் பணி மூலமாக எதிர்கால சந்ததி வளமோடு வாழ உதவியவர்கள் என்ற பெருமையைப் பெறுவோம்.

ஆகவே நூலக சேவையின் ஒரு அங்கமாக வெளிவரும் இச்சஞ்சிகை மணம் வீசி எல்லோர் கரங்களிலும் தவளவும் வழகாட்டியாக அமையவும் இறையருளை வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

**க.தனபாலசிங்கம்**

சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகரின் உள்ளத்திலிருந்து.....

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தில் முக்கியமான பங்கு வகிக்கும் வாசிப்புத்திறன் அந்தந்தப் பகுதி நூலகங்களினால் முன்னெடுக்கப்படுகின்றது. நவீன தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக குறைந்துவரும் வாசிப்புப் பழக்கத்தை மீட்டெடுக்க ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டு பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த வகையில் பல்லவராயன்கட்டு பொது நூலகமும் மாணவர்களிடையேயும், ஏனைய வாசகர்களிடையேயும் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த பல்வேறு வகையான விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும், போட்டிகளையும் நடாத்தி வாசகர்களை நூலகம்சார் திருப்ப பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களையும், புத்தாக்கங்களையும் மேற்கொண்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக பல்லவம் எனும் சஞ்சிகை எம்முடைய வாசகர்களின் கலைத்திறன் வெளிக்கொண்டு வரும் நோக்கில் அவர்களினுடைய ஆக்கங்களைத் தாங்கி இவ்வருடமும் இதழ் 4 வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

பல்வேறு ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் இச்சஞ்சிகைக்கு பல் வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய பூநகரிப் பிரதேச சபையின் தலைவர், செயலாளர் மற்றும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், பல்லவம் சஞ்சிகைக்குழு, வாழ்த்துச் செய்தியை வழங்கியவர்கள், ஆக்கப்படைப்பாளர்கள் மற்றும் வாசகர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொடர்ந்து இப்பல்லவம் எனும் இதழ் எதிர்காலத்தில் பல்வேறு ஆக்கங்களைத் தன்னகத்தே கொண்டு விருட்சமாக நிழல் கொடுக்க அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்த்து நிற்கின்றேன்.

**திருமதி லோகேஸ்வரன் பர்மிளா**
நூலகர்,
பல்லவராயன்கட்டு பொது நூலகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ உறுப்பினர்களின் விபரம்

## பூநகரி பிரதேச சபை – 2022

| இல | பெயர் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| 01 | சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன், கௌரவ தவிசாளர் | 077 886 2556 |
| 02 | முடியப்பு எமிலியாம்பிள்ளை, கௌரவ உப தவிசாளர் | 076 925 1766 |
| 03 | இராசையா பூபாலசிங்கம், கௌரவ உறுப்பினர் | 077 904 7195 |
| 04 | அடைக்கலராசா லூர்த்தம்மா, கௌரவ உறுப்பினர் | 077 057 9467 |
| 05 | கணேசமூர்த்தி கருணாகரன், கௌரவ உறுப்பினர் | 077 198 9909 |
| 06 | இராமுப்பிள்ளை செல்வராசா, கௌரவ உறுப்பினர் | 076 858 2126 |
| 07 | அருணாசலம் ஐயம்பிள்ளை, கௌரவ உறுப்பினர் | 077 418 9656 |
| 08 | சுப்பிரமணியம் சந்திரபோஸ், கௌரவ உறுப்பினர் | 076 641 8016 |
| 09 | தயானந்தன் ஜெயசித்திரா, கௌரவ உறுப்பினர் | 077 699 5413 |
| 10 | அருணாசலம் கேதீஸ்வரன், கௌரவ உறுப்பினர் | 077 654 8218 |
| 11 | கணபதிப்பிள்ளை தர்மராசா, கௌரவ உறுப்பினர் | 077 463 7756 |
| 12 | ஞானம் ரதிகரன், கௌரவ உறுப்பினர் | 076 696 6279 |
| 13 | தனேந்திரன் உதயதர்சினி, கௌரவ உறுப்பினர் | 077 424 6014 |
| 14 | யோன்பின்ரன் மேரி டென்சியா, கௌரவ உறுப்பினர் | 077 219 8510 |
| 15 | வசந்தகுமார் வட்சலாதேவி, கௌரவ உறுப்பினர் | 077 045 3085 |
| 16 | கார்த்திகேசு யோகராசா, கௌரவ உறுப்பினர் | 077 020 6382 |
| 17 | கிருஸ்ணசாமி திவாகரன், கௌரவ உறுப்பினர் | 077 752 0631 |
| 18 | கச்சு முகமட் கபீர், கௌரவ உறுப்பினர் | 076 889 6744 |
| 19 | குலராசசிங்கம் புவியரசன், கௌரவ உறுப்பினர் | 077 724 3723<br>077 527 8826 |
| 20 | கணேசமூர்த்தி ஜெயகுமார், கௌரவ உறுப்பினர் | 077 958 7474 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்பாட்டுக்குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு. சிவகுமார் ஸ்ரீறஞ்சன்<br>தலைவர், பூநகரி பிரதேச சபை |
| உப தலைவர் | :- | திரு இரத்தினம் தயாபரன்<br>செயலாளர், பூநகரிப் பிரதேச சபை |
| செயலாளர் | :- | திருமதி லோகேஸ்வரன் பர்மிளா<br>நூலகர், பொது நூலகம், பல்லவராயன்கட்டு |
| ஆலோசகர் | :- | திரு. கனகசபை தனபாலசிங்கம்<br>சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| உறுப்பினர்கள் | :- | 1) திரு. ம. மகிலன்<br>விவசாய போதனாசிரியர், (முழங்காவில்)<br>2) திரு. கோ. அரியநாயகம்<br>(முன்னாள் கிராம அலுவலர்)<br>3) திருமதி ஜெ. கோமளா<br>ஆசிரியர், (கிளி. கரியாலநாகபடுவான் இல. 02 அ.த.க பாடசாலை)<br>4) திருமதி ச. காந்திமதி<br>ஆசிரியர், (கிளி. வேரவில் இந்து மகாவித்தியாலயம்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சிகைக் குழு

ஆசிரியர் :- திருமதி லோகேஸ்வரன் பர்மிளா
நூலகர்

துணை ஆசிரியர்:- திருமதி ரஞ்சினி டயனிதாஸ்
(கிளி. ஜெயபுரம் மகா வித்தியாலயம்)

உறுப்பினர்கள் :-

1) திரு. அருணாசலம் கேதீஸ்வரன்
(பூநகரி பிரதேச சபை உறுப்பினர்)

2) திருமதி சந்திரபோஸ் காந்திமதி
ஆசிரியர், ( கிளி. வேரவில் இந்து மகா வித்தியாயலம்)

2) திருமதி ஜெயஸ்ரீதர் கோமளா
ஆசிரியர், (கிளி. கரியாலை நாகபடுவான் இல அ.த.க. பாடசாலை)

4) செல்வி பரமசிவம் டயானா
(நூலக அங்கத்தவர்)

5) செல்வி குகனேஸ்வரன் சபிதா
(நூலக அங்கத்தவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவத்தின் உள்ளே.....


1. வாழ்த்துச் செய்திகள் iii- vii
2. நூலகரின் உள்ளத்தில் இருந்து viii
3. கௌரவ உறுப்பினர்களின் விபரம் 2022 ix
4. செயற்பாட்டுக் குழு x
5. சஞ்சிகைக்குழு xi
6. மகிழ்ச்சி மருத்துவம் 01
7. அபலைப் பெண் 02
8. வாழ்வோம் வா 04
9. எதிர்காலத்தில் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவோம் 06
10. காலம் பாட்டியின் கதை 08
11. துண்டுப்பிரசுரம் பொலித்தின், பிளாஸ்ரிக் பாவனையை தடை செய்தல் 11
12. மது அற்ற உலகம் 13
13. சிறுவர்களே எமது சொத்து 14
14. நமது உடலுக்குள் ஒரு வைத்தியர் 16
15. Friend 17
16. Friend / Dad 18
17. சிந்தனைத்துளிகள் 19
18. முதியோர் நிலை 20
19. இலக்கியங்களில் பெண்களின் முக்கியத்துவம் 21
20. பிளாஸ்ரிக் என்னும் கொடிய அரக்கனை பூண்டோடு ஒழிப்போம் துண்டுப்பிரசுரம் 23
21. சமையல் குறிப்பு 24
22. சிறுவர்களின் கைவண்ணங்கள் 25
23. கடந்துபோன காலங்கள் 26
24. பெண்ணியம் 28
25. பதிவுகளும் பகிர்வும் 30
26. மூன்றெத்துக் கவிதை 31
27. நூலகம் 32
28. பெற்றோர் சொல் கேட்கவேண்டும் 33
29. கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி பயிர் செய்கை மேற்கொள்வோம் 34
30. எதிர்காலத்தில் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குதல் 36
31. பாடசாலை மாணவர்களின் இடை விலகலும் காரணிகளும் 37




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி அனுஷா சதீஸ்வரன்
சோலை
பல்லவராயன்கட்டு

# மகிழ்ச்சி மருத்துவம்

எல்லா நோய்களுக்கும் மூலகாரணம் துன்பமே என்பது கீழ் திசை நாட்டு மக்களின் நீண்ட நாள் நம்பிக்கை. ஒருவரை இடைவிடாது மகிழ்ச்சியில் வைத்திருப்பதன் மூலம் எந்த நோயையும் குணப்படுத்திவிட முடியுமென பழைய சீன மருத்துவமுறை கூறுகின்றது.

ஆனால் நோயாளியை எந்நேரமும் மகிழ்ச்சியில் ஆழ்த்துவதென்பது நடைமுறையில் சாத்தியமல்ல சில நேரங்களில் நோயாளியின் மகிழ்ச்சி மற்றவருக்கு துன்பமாகவும் அமையக்கூடும் மற்றும் நோயாளியின் மனோநிலையைப் பொறுத்து அவர் மகிழ்ச்சி கைகெட்டும் தூரத்திலோ எட்டாக் கனியாகவோ கூட இருந்து விடக்கூடும்.

மகிழ்ச்சி என்பது தேடிச் செல்வதல்ல அது நாம் உருவாக்குவதாகும். என்ற அடிப்படை உண்மையை நோயாளி புரிந்து கொண்டால் மகிழச்சி எளிதாகும். இரத்த அழுத்த நோய்க்கு சிரிப்பு மாமருந்தாகும்.

அவரது ஆளுமையை அவரே வெளிக்கொணரும் வழியை நோயாளிக்குக் கற்றுத் தருவதே மகிழ்ச்சி மருத்துவமாகும். தையல், ஓவியம், இசை, நடனம், விளையாட்டு போன்ற மனம் இலயிக்கும் ஆயிரக் கணக்கான எளிய வழிகளில் நோயாளி மகிழ்ச்சியை உருவாக்கிக் கொள்ளமுடியும்.

இத்தகைய மகிழ்ச்சி உடலில் பரவியிருக்கும்போது நம் உடல் திசுக்கள். ஆக்சியினால் நிரப்பப்பட்டு வெள்ளை அணுக்கள் எந்த நோய்க் கிருமியையும் அடித்து விரட்டும் வலிமை பெறுகின்றன. சுரப்பிகள் சரியாகச் சுரக்கின்றன. கழிவுப் பொருட்கள் நீங்குகின்றன.

நம் மகிழ்ச்சிக்கு நிலையான வழி மற்றவர்களை எப்போதும் நாம் மகிழ்ச்சிப்படுத்த முயல்வதாகும். எல்லோரும் இன்புற்றிருக்க, என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற சமூகப் பார்வை தரும் மகிழ்ச்சியை அனுபவிப்பவர்களுக்கு எந்த நோயும் வருவதில்லை. சிரித்து சிரித்து பெருத்துப்போ என்பது உண்மையான பழமொழியாகும். எனவே மகிழ்வுடன் வாழ்வோம் - வாழ்க்கையை மகிழ்வாக்குவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி ஐங்கரன் இந்துஜா**
M.O.H வீதி,
ஜெயபுரம் தெற்கு, ஜெயபுரம்.

# அபலை பெண்



பெண் எனும் நாமம் வேதனைகளின் திருவுருவம் ஜனனத்தின் போது வரும் கண்ணீர் அவளது இறப்பு வரை தொடர்கின்றது. பெற்றோர்களின் அரவணைப்பில் இருக்கும் வரை ஒரு பெண்ணானவள் வாழ்வின் முழு சொர்க்கத்தையும் காண்கிறான். பதினெட்டு வயது வரை சிறுவர்கள் எனும் அத்தியாயத்தின் கீழ் இருக்கும் பெண்கள் 20 வயதில் காதல் எனும் நரகத்தில் விழுகின்றனர். காதல் எனும் வார்த்தை அனேக மானவர்களுக்கு வேதனையே கொடுக்கின்றது. அவ்வாறு வழி தவறி செல்வதை விட கல்வி மேல் ஆதிக்கம் செலுத்தி அதன் வழியில் உயர்ந்து உயர்ந்து செல்ல வேண்டும்.

பெண் என்பவள் கம்பீரத்துடனும் தைரியத்துடனும், வாழவேண்டும். கம்பீரத்தையும், தைரியத்தையும் தருவது கல்வி மட்டுமே. கல்வி எனும் நீரை அள்ளி அள்ளி பருகவேண்டும். அடுத்தவரை நம்பாமல் நமது சொந்தக் காலில் நிற்க வேண்டும். பெண்கள் சாதனைக்குரியவர்களாக போற்ற வேண்டும். சிறிய வயதுகளில் திருமணம் எனும் வலையில் சிக்கி சீரழிவதை தவிர்த்து கல்வியை பருந்துபோல நினைத்து அதன் வழியில் உயர உயர பறக்க வேண்டும். நாம் நமக்காக வாழ வேண்டும்.

அடுத்தவர்களுக்காக வாழ்வதை விடுத்து நாம் நமது வாழ்வியலை மேம்படுத்த வேண்டும். பிரச்சினைகள் இல்லாத குடும்பம் இல்லை. கஸ்ரம் இல்லாத நபர்கள் இல்லை. ஒவ்வோர் குடும்ப வாழ்க்கையும் பெண்களுக்கு சவாலானதாகவே இருக்கின்றது. ஒரு பெண் திருமணம் முடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகன் வீட்டுக்கு வரும்போது எல்லா கஷ்டத்தையும், மனக்கவலைகள் அனைத்தையும் ஏற்பதற்கு தயாராக வேண்டும். இன்பத்தைவிட துன்பம் நிறைந்த இடமே மணமகன் இல்லம்.

ஒரு பெண்ணுக்கு அவளது கணவன் ஆதரவாக, துணையாக இருக்கும் பட்சத்தில் தலையில் இடி விழுந்தாக்கூட அதை தாங்கிக்கிற சக்திவரும். ஓர் ஆணுக்கு மனைவி என்பவள் இல்லாத காலத்தில் அவன் அநாதை தான். இன்பத்திலும் துன்பத்திலும் வாழ்நாள் பூராவும் பங்கெடுக்கப்போவது மனைவிதான்.

பணம் இருந்தால் நீ கடவுள், குணம் இருந்தால் குப்பை, நடித்தால் நல்லவன், உண்மை பேசினால் பைத்தியக்காரன், அன்பு காட்டினால் ஏமாளி, எடுத்துச் சொன்னால் கோமாளி இவை தான் இன்றைய சமுதாயம், கோபத்தில் கொட்டிய வார்த்தைகள் மன்னிப்பு வேண்டி சேர்ந்தாலும் அந்த காயங்கள் மாறாது. பெண்ணானவள் இந்த சமுதாயத்தில் வாழ்வதற்கு அச்சப்படுகின்றார். ஒரு பெண்ணை போற்றுகின்ற இச்சமுதாயமே நாளை அவளை தூற்றி தற்கொலை வரைக்கும் கொண்டு செல்கின்றது. மனிதனுக்கு எதிரி மனிதனே. இச்சமுதாயத்தில் வாழ்வதற்கு "மௌனம்" மட்டுமே வழி அடுத்தவர் பேசும் பேச்சு ஒன்று பிடிக்காதபோது, யாருக்குமே நம்மை புரியாதபோது, நம்மைவிட்டு பிறர் விலகும்போது, நம்மோடு யாரும் பேசாதபோது, நம்மை யாராவது குறைகூறும்போது, நமக்கு கோபம்வரும்போது, நம்மளை யாராவது வெறுக்கும்போது, பிரச்சினைகள் துரத்தி துரத்தி வரும்போது "மௌனம்" ஒன்றே சிறந்தது.

பெண்களே தேவையில்லாத பிரச்சினைகள் வரும்போது மௌனமாய் மட்டும் இருந்து பாருங்கள் துரத்திவரும் பிரச்சினை இடையோடு நின்றுவரும் இந்த உலகத்தில் மிருகங்களைவிட கொடுமையானவர்கள் மனிதர்களே. அனைத்து மனிதர்களும் சந்தர்ப்பவாதிகளே. யார் எப்படி எப்போது மாறுவார்கள் என்று யாருக்கும் தெரியாது.

நமக்கு எதிராக பிரச்சினைகள் தவழ்ந்து வரும்போது என்ன ஆகுமோ என்று எண்ணாமல் முட்டிப்பார். எழுந்தால் வெற்றி, வீழ்ந்தால் அனுபவம்.

"அனுபவம் வாழ்க்கை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வி நல்லதம்பி சயுதா**
ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம்,
ஜெயபுரம்.


# வாழ்வோம் வா....

உலகைப் புரிந்து வாழ்வோம் வா
உன்னையும் என்னையும் புரிந்து வாழ்வோம் வா
நீயும் நானும் சேர்ந்து வாழ்வதற்கு
பணமும் பதவியும் தேவையில்லை
அடுத்தவன் போல் வாழ ஆசைப்பட்டால்
எடுத்ததற்கு எல்லாம் பணம் வேண்டும்
அடுத்ததற்கு எல்லாம் ஆசைப்படாமல்
கொடுத்ததை வைத்து வாழ்வோம் வா - இறைவன்
கொடுத்ததை வைத்து வாழ்வோம் வா.

கலவரம் இல்லா பூமியாய் நாம் தலைமுறை
தலைமுறையாய் வாழ்கிறோம்
தலைவர்கள் நிலை எதுவாக இருந்தாலும் - நாம்
அதில் தலையிடாமல் வாழ்வோம் வா.

சிலைகளிடம் யாரும் பேசிட வேண்டாம்
விலைகொடுத்து அதை வாங்கிடவும் வேண்டாம்
தலைக்கு மேலே நமக்கு வேலைகள் உண்டு
நிலை தடுமாறும் இவ்வுலகத்திலே
நிலை தடுமாறாமல் வாழ்வோம் வா.

கற்பனை செய்தால் எல்லாம் கனவில்வரும்
விற்பனைக்கு வருவதை மட்டுமே வாங்கிவிடு
சொப்பனம் என்பதை கண்டால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பனைப்போல வாழ்க்கை ஆகிவிடும்.
தப்பெனத் தெரிந்தால் செய்வதை
தவிர்த்துவிட்டு தப்பித்து வாழ்வோம் வா வா
கொட்டிக் குவிப்பவனும் தட்டிப்பறிப்பவனும் இவ்வுலகில்
விட்டுக் கொடுத்தும் கட்டிக் கொடுத்தும் வாழ்கையை
நடத்தி வாழ்வோம் வா.

உன்னை மீறி எதுவும் நடக்காது
உனக்குத் தெரியாமலும் எதுவும் நடக்காது
உலகம் என்றும் உனக்கே - என்று
உறுதி கொண்டு வாழ்ந்து வென்றிடவா.

பணத்தை வங்கியில் போட்டு வைக்கலாம்
தங்கத்தைகூட அங்கே போட்டு வைக்கலாம்
வாழ்க்கை என்பதை வைத்திருக்க முடியாது
வாழும் காலத்திலேயே சிறப்பாய் வாழ்வோம் வா.

பிறப்பிற்கும் இறப்பிற்கும் நடுவேதான் வாழ்க்கை
மறுப்பிற்கும் வெறுப்பிற்கும் அதை வீணாக்காமல்
பொறுப்பாய் வாழ்வோம் வா வா வா.

இரவொன்று வந்தால் விடிந்துவிடும்
துயர் என்று வந்தால் முடிந்துவிடும்
உயிர்போகும் அளவிற்கு ஒன்றுமில்லை
உயர்வு கொள்வோம் என நினைத்து வாழ்வோம் வா

வாழ்க்கையில் அடிபடும் போதெல்லாம்
துடிப்படையாதே - நீ
அடிபட அடிபடத்தான் - உனக்கு
வாழ்க்கையின் அடிப்படை புரியும்
அனைத்தையும் அனுசரித்து வாழ்வோம் வா
வா வா வா வா வா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி ர. யதுர்மினா
தரம் 09
கிளி/ கிராஞ்சி அ.த.க பாடசாலை
(வாசிப்பு மாத போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை)

# எதிர்காலத்தில் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவோம்

- முன்னுரை அறிமுகம்
- அறிவார்ந்த சமூகம் என்றால் என்ன?
- அறிவார்ந்த சமூகத்தின் இன்றைய நிலை!
- எதிர்கால அறிவார்ந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான வழி முறைகள்

முடிவுரை

அறியாமை உள்ள அறிவிற்கும் அறியாமைக்கும் வேற்றுமை இல்லை. அறிவு என்பது ஒரு மனிதனுக்கு கிடைத்த வரப்பிரசாதம் ஆகும். அவ் வறிவானது ஒரு மனிதனுக்கு எவ்வளவு பலனை தருமோ அவ்வளவும் தரும் நம் சமூகம் அறிவை நோக்கிய பாதையில் செல்வது மிகமிக அரிதாகிவிட்டது. அதை நாம் உணர்வதில்லை நம் பிறப்பு முதல் இறப்பு வரை அறிவு நம்மோடு தான் இருக்கின்றது.

ஒழுக்கம், கலாசாரம், கல்வி, பண்பாடு, சமயம், அறிவு என்பனவே அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குகின்றது. ஒரு கிராமம் முன்னேறுவது என்றால் அங்கு ஏதோ ஒரு மாற்றம் நிகழ்ந்து உள்ளது. அது கல்வி மூலம் என்றால் எவ்வளவு பாராட்டுக்குரியதாகும். நம்மவர்களின் சமூதாயம் அறிவார்ந்ததும், விவேகமான தாகவும், விநோதமாகவும் உள்ளது நம் யகம் அதில் எத்தனை வித்துவான்களும், அறிஞர்களும், விஞ்ஞானிகளும் வாழ்ந்துள்ளனர். வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களெல்லாம் எத்தனை கருத்துக்கள், பொன்மொழிகள், திருக்குறள்கள், பாட்டுக்கள் மூலம் நமக்கு விடை தெரியா வினாக்களுக்கு பதில் சொல்லியிருக்கிறார்கள். நம் சமூகம் வளர்ச்சியடைந்துவிட்டது தான் ஆனால் அது அறிவின் மூலம் அல்ல இலத்திரனியல் மூலம் ஆனவையே உடுத்தாமல் வாழ்ந்த நமக்கு படிப்படியாக வெட்கம் எனும் உணர்ச்சி தெரிந்து இப்போது அறிவின் உச்ச கட்டத்திற்கு சென்றுவிட்டோம். என நினைக்கின்றோம் அல்லவா? நம் சமூதாயத்தில் அறிவு எனும் பெருங்கடலில் யார்? முத்து எடுக்கிறானோ அவனே தலை சிறந்தவன் ஆகிறான். அறிவு பற்றி கூறாத பெரியோரும் இல்லை. சிந்தனையாளரும் இல்லை. தெரியாததை தேடி அறிவதே அறிவு ஆகும். நம்மவர்களின் அறிவு எனும் பெருங்கடலில் மூழ்கி செய்த சீர்கேடுதான் என்ன?

"ஒரு குடம் பாலில் ஒரு துளி விசம்" நற்மனிதர், நற்குணம் கொண்ட சிறந்த ஆற்றலுடைய செயற்றிறன் என எழுத்தாளர்களைக் கொண்ட அறிவான சமூகத்தில் போதைப்பொருள் பாவனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவயது திருமணம், கொலை, கொள்ளை, பாலியல் கொடுமைகள் போன்றனவே மேலோங்கி நிற்கின்றன. மாணவர்கள் போதைப்பொருள் பாவனை, புகையிலை சாப்பிடுதல் என்று எண்ணற்ற தீச்செயல்களை புரிகிறார்கள். இதை தெரிந்தும் இக்கால கட்டத்தில் எதும் செய்ய இயாலாமல் தான் நாங்கள் எல்லாம் நிற்கின்றோம். இணைய படிப்பின் மூலம் அரைவாசி மாணவர்கள் சீர்குலைந்தே விட்டார்கள் இதற்கெல்லாம் யார்? காரணம் நாங்கள் தான் நம் செயல்கள் தான் காரணம். நம் தந்தை, தாய் படும் கஷ்டத்தை நாம் உணர்வதில்லை. எவன் ஒருவன் உணர்கின்றானோ அவன் தன் சிந்தனையும் அறிவையும் எப்போதும் உருகுலைக்கமாட்டான். தொலைபேசிகளெல்லாம். தொல்லைபேசிகளாகவே இப்போது மாறிவிட்டது. தற்கொலை எல்லாம் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. சிறுவர்களுக்கெல்லாம் தொலைபேசி பாவனை கூடிவிட்டது. கொரோனா மூலம் நம் கல்வி எல்லாம் தடைப்பட்டுவிட்டது அக்காலகட்டத்தில் கற்க வேண்டியதெலல்லாம் தவறிவிட்டது. கிராமத்தில் கற்கின்ற மாணவர்களின் நிலை அதைவிட மோசம் நம் சமூதாயத்தில் இதை மாற்றவேண்டும்.

அதற்கு முதலில் தொலைபேசி பாவனையை குறைக்க வேண்டும், படிப்பு மட்டத்தை கூட்டவேண்டும், வாசிப்பை மெருக்கூட்ட வேண்டும் சிறந்த நூல்கள் படிக்கவேண்டும், நூலகங்கள் நிறைய திறக்க வேண்டும் இணைய படிப்பை மாணவர் மத்தியில் குறைக்கவேண்டும் வாசிப்பு ஒரு சிறந்த ஒரு வழிகாட்டி ஆகும். சிறுவர்களின் சிந்தனையை மேம்படுத்த வேண்டும். பாடசாலைகளில் போட்டிகள் வைத்தல், மாணவர்களிக்கிடையில் நட்புறவை வளர்த்தல் நல் ஆசான் ஒருவர் கற்பிப்பதை மட்டுமே நோக்காக வைக்கமாட்டார்.

அன்னமானது பாலும் நீரும் உள்ள பாத்திரத்தில் பாலை பிரித்தெடுத்து அருந்துமாம் அதைபோல் நாமும் தீயவற்றை விடுத்து நற்செயல்களை செய்வோம். பசுவோட சேர்ந்த பன்னியும் புல் உண்பதைப்போல் நம்மோடு பழகுபவர்கள் தீயவர்களாக இருந்தாலும் அவர்களையும் நல்வழிப்படுத்தி நம் அறிவார்ந்த சமூகத்தை நம்மவர்களின் அறிவுகொண்டு உயர்த்துவோம் ஒன்றே செய்வோம் நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன்
திரு. இராமையா இராஜரட்ணம்
ஜெயபுரம் வடக்கு.

# காலம்! பாட்டியின் கதை!

இந்தப் பாட்டியார்?

எங்கிருந்து வந்தாள்? ஊர் எது? எதுவுமே தெரியாது! ஆனால், இந்த பாட்டியின் கதையை கேட்காதவர்களும் இல்லை. தெரியாமல் இருந்தவர்களும் இல்லை. கதையை சொல்லாதவர்களும் இல்லை. இருப்பினும், இவர் பெயர், வயது எதுவுமே தெரியாது விட்டாலும், இவரை முதலில் கிழவி என்றே சொன்னார்கள்.

பின் நாளில் எமது முன்னோர்களுக்கும் அவர் வழி வந்தவர்களுக்கும், வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கும், இவர் கதை வாழ்வதால், இவரை உறவுமுறை வைத்து, கிழவி என்றோர் பாட்டியென அன்புடன் அனைவருக்கும் பாட்டியானார்.

இவர் மூன்று காலங்களையும் கடந்து வென்று நிலைப்பதால், "காலமானவர்" ஆகின்றனர். எப்படி?

இராமாயணம் :- வால்மீகி கம்பர் - துளசிதாசர் என்றும்,

மகாபாரதம் :- வியாசமுனிவர்கூற, விநாயகர் எழுதியதாகவும:,

திருவிளையாடல் :- பரஞ்சோதி முனிவர் என்றும்,

திருமந்திரம் :- சுந்தரன் என்றும், நந்தியம்பெருமானால் நாதன் என்றும் பெயர் சூட்டப்பட்ட வருமான இவர், தில்லையில் நடராஜபெருமானை வணங்கிவிட்டு, சாத்தனருக்கு வரும்போது, பசுக்களை மேய்த்துவந்த மூலன் இறந்துவிட, பசுங்களின் துயரை போக்க "பரகாயப்பிரவேசம்" என்ற சித்தியினால் மூலன் என்ற இடையனின் உடலினில் புகுந்தார். பசுக்களை வீடுகளில் சேர்த்துவிட்டு உடலை வைத்த இடம் வந்து பார்த்தபோது உடல் அங்கு இல்லாதபடியால், இதுவும் இறைவன் செயலென நினைத்து, மூலனின் உருவத்திலேயே, மூவாயிரம் ஆண்டுகள் தவம்செய்து, ஆண்டுக்கு ஒரு பாடல் வீதம் பாடியருளினார். இதுவே "திருமந்திரம்" ஆகும்.

இவைகள் யாவும் வாசிப்பின் வாயிலாக கற்றுக்கொண்டவை, ஆனால், கிழவியின் கதையை சொல்லக் கேட்டிருக்கின்றோமே தவிர எந்த காலப் பகுதியில் சொல்ல ஆரம்பித்தார்கள், யார் எழுதியது? யாரால் யாருக்கு சொல்லப்பட்டது என்ற வரலாறோ இன்று வரை யாரும் எழுதவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே தோன்றுகிறது. தெரிந்தவர்கள் தெரியப்படுத்தவும். கருத்தாழம்மிக்க கதையாகும். பொருள் பொதிந்த கதையாதலால் "காலமான" கதையாகும்.

இக்கதையில் வரும் சம்பவங்கள், மூலப்பொருள், நிகழ்ச்சியும், இதனில் பொருந்திக்கிடக்கும், நன்மையான விடயங்களைப் பார்ப்போம்.



பாட்டியின் கதையை இன்றைய இளம் தலைமுறையினர்களுக்கு, இவர்களது இன்றைய பெற்றோர்கள் கூறவாயப்பில்லை. தாயும் தந்தையும் தொழில்புரியச் செல்ல உள்ளதால், பிள்ளைகள் புத்தக சுமையோடு பாடசாலைக்கு செல்வதும், போன் விளையாட்டு, தொலைக்காட்சி, நாட்கள் சில வாகும்போது, கதை கூறவும், கதை கேட்கவும் நேரம் இருக்காது. என்றாலும், இவர்களுக்காக எழுதி வைப்போம்.

கதையில் வரும் காட்சிகள்:- ஒரு ஊரில் ஒரு பாட்டி வடை சுட்டு விற்று தனது உழைப்பால் உண்டு வந்தாள். ஒருநாள் ஒரு காகம் வடையை வாயினால் கௌவிக் கொண்டு மரக்கிளையில் வைத்து உண்ணப் போகையில் அவ்வழியே ஒரு நரி வந்தது. அது மரத்தை அண்ணார்ந்து பார்த்தது. காகம் வாயில் வைத்துள்ள வடையை கண்டு கொண்டது. எப்படியாவது வடையை தான் உண்ண நினைத்து, காகத்தைப் பார்த்து காக்கையாரே நீங்கள் அழகான பட்சியாக இருக்கிறீர்கள். நீங்கள் எனக்காக உங்கள் திருவாயால் ஒரு பாட்டு பாடுங்கள் என்றது. காக்கைக்கு பெரிய சந்தோசம்! என்னை அழகான பட்சி என்கிறார் பாடச் சொல்கிறார், என் பாட்டும் இனிமையென்பார் என்ற பேராசையால், வாயை திறந்து கா, கா என்றது வடை கீழே விழுந்தது. நரி வேகமாய் பாய்ந்து கீழே விழுந்த வடையைத் தூக்கிக்கொண்டு காட்டிற்குள் ஓடி மறைந்தது. காகம் ஏமாற்றமடைந்து.

பொருள்:-கதையின் மூல கதாபாத்திரம்:- வடை, இது கடலையை உடைத்து பருப்பாக்கி ஊறவைத்து அரைத்து தயாரிக்கப்படுவது, யாவரும் அறிந்தமையே!

கடலை: உடலுக்கு வலுவூட்டக்கூடியது என்பதால் ஒரு கைப்பிடி கடலை எடுத்து நீர்விட்டு இரவில் ஊறவைத்து காலையில் நீரை பருகி, கடலையை சாப்பிட்டு வந்தால் உடல் வலிமைபெறும். என்பது சான்றோர் கூறுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை வடையாக தயாரிக்கும்போது வெங்காயம், சீரகம், உள்ளி, மிளகாய், மஞ்சள், உப்பு, கறிவேப்பிலை, நீர் சேர்த்து பிசைந்து, தேங்காய் எண்ணெயிலே போட்டு பொரித்துதான் வடை!

கடலையின் பயனை உணர்ந்துதான்!

ஆலயங்களிலும், இறைவனுக்கும், நிவேதனம் செய்கிறார்கள். விருந்துபசாரங்கள் நடைபெறும். இடங்களில் கத்தரிக்காய் கூட்டோடு கடலையை சேர்த்து விடுவார்கள் இதனையே விரும்பி கேட்பார்கள். (கடலையின் பயன்பாடு)

மனிதன் பக்குவப்பட வேண்டும்!

பக்குவபடாதவர், துள்ளிக் குதிப்பார்கள், ஓடித்திரிவார்கள், பேரிரச்சலோடு கூப்பாடு போட்டுத் திரிவார்கள், பக்குவபட்டு விட்டால் அமைதியடைவார்கள். இதைப்போலத்தான் வடைபோட பிசைந்து வைத்த மாவை தட்டி எண்ணெயிலே போட்டவுடன், இதன் ஓட்டமும், துள்ளலும், குதிக்கிற குதியும், போடுகிற பேரிச்சலும் பக்குவப்பட்டுவிட்டது, (வெந்துவிட்டதும்) அடங்கிவிடுவது, பக்குவமடைவதை குறிப்பதாகும்.

சிலரை பார்த்துப் பொடா வீணாப்போன பலகாரம் என்று!

வடையாக தட்டி எண்ணெயில் போட்டு நிலை குறுக்கு மறுக்க துள்ளிக் குதித்து பேரிரச்சையோடு ஆர்ப்பாட்டம் செய்து உதிர்ந்து போனது, கடைசி வரையிலும் எண்ணெயிலேயே கிடந்து கறுகி ஒன்றுக்கும் உதவாது போவதுபோல் சிலரது செயற்பாடு இருப்பதால், வீணாப்போன பலகாரம் என்பார்கள்.

எச்சந்தர்ப்பத்திலும், தனது முயற்சியில் கண்ணும் கருத்துமாக விழிப்பாக இருக்கவே காகம் வடையை தூக்கிச் செல்வதாகவும், காகத்தின் தந்திரம்போல் நம்மையும் சிலர் தந்திரம் செய்து விடுவர் என்பதை உணர்த்துவதாகவும்,

காகத்தை போன்று தந்திரக்கார்களிடமும் ஏமாற்றுக்காரர்களிடம் ஏமாந்து போகாமல் வாழும் முறைமையை எடுத்துரைப்பதாகவே இக்கதை உருவாக்கப்பட்டு பரம்பரை பரம்பரையாக வயதானவர்கள் கூறுவதாக அறிந்தே யானும் எழுதுகின்றேன்.

காலமாகிவிட்ட இக்கதையானது, பாட்டி வைத்தியம்போல் வாழும் வகை உணர்ந்து வாழ வைத்துள்ளதை யான் உணர்ந்தேன். யாவர்க்குமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி கு. புகழினி
தரம் - 10
கிளி/ ஜெயபுரம் மகாவித்தியாலயம்.

வாசிப்புமாத போட்டியில் முதலிடம் பெற்ற துண்டுப்பிரசுரம்

# பொலித்தீன் / பிளாஸ்ரிக் பாவனையை தடை செய்தல்

**அன்பார்ந்த பொதுமக்களே!**

இன்றைய காலகட்டத்தில் முக்கிய பிரச்சனைகளுள் ஒன்று பொலீத்தீன் / பிளாஸ்ரிக் பாவனையாகும். இதனால் பல தீங்குகள் ஏற்படுவதால் இதை பல சமூக நிறுவனங்கள் எச்சரித்தபோதும் இதன் பாவனையானது அதிகரித்த வண்ணமே உள்ளது.




## பின்வரும் விடயங்களில் மக்கள் கவனஞ் செலுத்த வேண்டும்

❖ புடவைத் தொழிற்சாலைகளில் இருந்து பொதி செய்யப்பட்டு நகர்ப்புறக் கடைகளுக்கு அனுப்பப்பட்டு விற்பனை செய்யப்படும் புடவைகளில் இருந்து அகற்றப்படும் பொலித்தீன் ஆனது நகர்ப்புறங்களில் வழிந்தோடும் சாக்கடைகளில் சேர்வதனால் ஓடும் நீரைத் தடை செய்வதோடு பல நோய்ப்பெருக்கத்திற்கும் வழிவகிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பலசரக்குப் பொருட்களை வாங்கும்போது கடைகளில் பொருட்களை பொதி செய்து கொடுக்கின்றனர். இதனால் வீடுகளிலும் சுற்றுப்புற சூழல்களிலும் பொலித்தீன் சேர்ந்து மழை காலங்களில் நீர் தேங்கி நுளம்பு பெருக்கத்திற்கும் இடமளிக்கின்றது.
- பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் போத்தல்கள் மண்ணில் புதைவதால் நிலம் மாசடைவதோடு நுண்ணங்கிகளின் அழிவுக்கும் காரணமாகிறது. பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களை எரிப்பதால் கிடைக்கும் பாதகமான விளைவுகள்
  - பொலித்தீன் பைகளை எரிப்பதால் குழந்தைகள் பெரியோர்கள் என அனைவருக்கும் சுவாசிப்பதற்கு சிரமப்படுகின்றனர்.
  - நுரையீரல் சம்பந்தமான பல நோய்கள் உருவாகின்றன.
  - இதை சுவாசிப்பதால் சுவாசம் சம்பந்தமான நோய்கள் உருவாகி சில காலங்களில் உயிரிழக்கின்றனர்.

**பொலித்தீன் பாவனையைக் குறைக்க செய்யவேண்டியது என்ன?**

- கடைகளில் பொலித்தீன் பைகளை வாங்குவதை குறைக்கவேண்டும்
- பொலித்தீன் பைகளில் உணவுப் பொதிகளை கொள்வனவு செய்வதை குறைக்கவேண்டும்
- பொலித்தீன் பைகளை உரிய குப்பை கூடையினுள் போட வேண்டும்.
- பொலித்தீன் பிளாஸ்ரிக் பொருட்களை எரிப்பதையோ அல்லது புதைப்பதையோ நிறுத்த வேண்டும்.

சுத்தம் சுகம் தரும்!

நோய்க்கு இடமளிக்காதீர்! வருமுன் காப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வன் நந்தகுமார் விருத்தன,**
கிளி/ ஜெயபுரம் மகாவித்தியாலயம்,
தரம் - 08

# மது அற்ற உலகம்



நவநாகரிகம் வளர்ந்துவிட்ட இந்த உலகிலே அழகுக்கான சில வேறுபட்ட பழக்கங்களும் தோன்றிவிட்டன. மேலைத்தேய நாட்டவர்கள் அறிந்திருக்கும் ஒன்று மது. ஆனால் முழு உலகமும் அதற்கு விதிவிலக்கல்ல. எந்த நாட்டிலும் மதுப்பாவனை என்பது தவிர்க்க முடியாததொன்றாகிவிட்டது. மதுபாவனை ஆரம்ப மானது இங்கிலாந்தில் என தரவுகள் மூலம் அறியப்படுத்துகிறது. மருத்துவ தேவைக்காகத் தயாரிக்கப்பட்ட இந்த மது தற்போது நாகரிகம் ஆகிவிட்டது. மேலைத்தேய நாடுகளில் விருந்து களில் பங்குகொள்ளும்போது அந்த விருந்தில் முக்கிய இடம்பெறுவது மதுதான். மது அருந்தா தவர்களை ஒதுக்கி வைத்து விடுவர். மனிதர்கள் மதுவுக்கு அதிக மதிப்பை கொடுக்கின்றனர். ஐரோப்பிய நாடுகளில் பலவிதமான மது வகை களைக் காணலாம். பல நிறுவனங்கள் மதுவை வைத்து சாதனங்கள் தயாரிக்கின்றனர். அவை பல கோடி ரூபாவுக்கு விற்பனையாகின்றன. மதுவை தற்பொழுது விமானம்மூலம் பெரும் அளவில் கடத்தி வருகின்றனர். மதுவின் தாக்கம் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. மது என்னும் பெயரிலே வினைமறைந்துள்ளது. மனதை மயக்கும் துன்பத்தை ஏற்படுத்தும், பெருமளவு பாதகமானது மது உலக மக்களின் மனதை மயக்கியது விந்தையே. பெரும்பாலான நாடுகளில் மது மக்களால் உபயோகிக்கப்படுகிறது. குறிப்பாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் இதன் பாவனை மேலோங்கிக் காணப்படுகிறது. அதைவிட தீமைகளை நோக்குவோமாயின் அவை மிகவும் பாரதூரமானவை. மது என்பது ஒரு மயக்கும் மோகினி, ஒருமுறை தன்னை அருந்தியவர்களை மீண்டும் மீண்டும் அருந்த வைக்கும் பொருளாகும். இது போதையை ஏற்படுத்தும் அளவுக்கு அதிகமாக மதுவை குடிப்பவர்களை அது சீரழிக்கும். இது பற்பல புதுப்புது நோய்களை தோற்றுவிக்கும். மூளை புற்றுநோய், ஈரப்புற்றுநோய் என்பன ஏற்படும். எனவே இந்த மது, கஞ்சா போன்றவற்றை அழித்து "மது அற்ற உலகத்தை உருவாக்குவோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி தர்மராசா கௌசலா
உயர்தர மாணவி
கிளி / ஜெயபுரம் மகா வித்தியாலயம்

# சிறுவர்களே எமது சொத்து

"பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை அறிவு அறிந்த
மட்கட்பேறு அல்லபிற"

என வள்ளுவர் பிள்ளைச்செல்வம் பற்றி இவ்வாறு கூறுகிறார்.

ஒருவர் பெறும் செல்வங்களுள் தலையாய செல்வம் அறிவானவற்றை அறிந்த மக்களைப் பெறுவதாமே பிறர் பழிக்கப்படாத நல்லொழுக்க நற்குணங்களையுடைய மக்களைப் பெற்றோர் பெறுவாராயின் அவர்களது ஏழு பிறவிகளுக்கும் ஒருபொழுதும் துன்பம் ஏற்படாது இதனை பெறுதற்குரிய பேறுதான் பிள்ளைச் செல்வம் என்பர். இவர்களின் வளர்ச்சிப்படி முறையானது,

| | | |
|---|---|---|
| குழந்தைப் பருவம் | 1 - 5 | வயது |
| பிள்ளைப் பருவம் | 6 - 12 | வயது |
| கட்டிளமைப் பருவம் | 12 - 16 | வயது |

"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" இவர்களை மாறிவிடும் இவ்வறிவு பிரபஞ்சத்தின் அபிவிருத்தியில் வளர்த்து தலைவராக்க வேண்டியது எம் ஒவ்வொருவரின் பொறுப்பாகும். இவ் இளமைப் பருவமானது வாழ்க்கையின் ஆயத்தப்பருவமாகும். வாழ்க்கை என்பது பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலான போராட்டமாகும். குழந்தையின் மூளை பிறக்கும்போதே 90 வீதம் வளர்ச்சியடைந்து விடுகின்றது. அதன் முழுவளர்ச்சியும் 1 - 5 வயதிடையே பெற்று விடுகின்றனர். 100 ஆண்டுகள் வாழ்வதற்கான வளர்ச்சியை குழந்தை 5 வயதிலேயே பெற்றுவிடுகின்றார்.

குழந்தை தன் 3 வயதை அடையும்போது வெளியுலகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறது. திருஞானசம்பந்தர் தம் 3வது வயதில் இறைவனை அடையாளம் காட்டுவதை அறிந்திருக்கின்றோம். வளரிளமைப் பருவம் என்பது 10 - 15 வயது வரையான காலமாகும் எல்லாக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்பிலாகும். பிள்ளையின் அறிவும் திறனும் மனப்பாங்குமே பிள்ளையின் ஆளுமையை வளர்க்கிறது.

எனவே பிள்ளைகளிடம் அன்பை விதைத்து அவர்களின் அன்பை அறுவடை செய்யுங்கள். நல்லவராக்குங்கள் இயந்திரமயமான இந்த உலகில் பிள்ளைகள் மீது அன்பு செய்ய பெற்றோருக்கு நேரமிருப்பதில்லை. ஆயாக்கிடமே பிள்ளைகள் அன்பை பெறுகின்றன. இந்த அன்பு சரியாகக் கிடைக்காத பிள்ளைகளே குற்றம் புரிபவர்களாகவும், சிறைக் கூடங்களை நிரப்புபவர்களாகவும் உள்ளனர். இவர்களிடம் கேட்டால் என் மீது அன்பு காட்ட யாருமில்லையே? யாரும் என் மீது அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் நிழல்கள்


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் நிழல்கள்




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் நிழல்கள்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் நிழல்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையே? என்கின்றனர். இவர்கள் தான் பிறர் காட்டும் நயவஞ்சக அன்பில் தம்மை பறிகொடுத்து துஷ்பிரயோகத்தில் முடியுறுகின்றது.

"அன்பின் வழியது உயர்நிலை அஃது இல்லார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"


எனவே சிறுவர் மீது அன்பு செய்தல் இன்றைய காலம் வேண்டி நிற்கும் வரமாகும். "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" எனவே அன்பும், ஆனந்தமும் பற்றுணர்வும் உள்ள சூழலிலேயே அறிவுடைய பிள்ளைகள் உதயமாகும். அப்படியான சூழலிலேயே வளரும் பிள்ளைகளே நற்பிரஜைகளாக நாட்டின் தலைவர்களாக தம்மை அறிமுகம் செய்கின்றனர்.

எமது சொத்துகளாகிய இவர்கள் ஏழ்மை அச்சுறுத்தல் அற்ற சமூகச் சூழலில் உரிய உரிமையுடன் வாழவேண்டும்.

பல லட்சம் மக்களையும், சிறுவர்களையும் ஈவிரக்கமற்று அணுஆயுதங்களாலும் வேறு ஆயுதங்களாலும் கொன்று பசியடங்கிய 2ம் உலக மகாயுத்தத்தின் பின்பே சிறுவர் உரிமைகள் மீதும் மனித உரிமைகள் மீதும் உலகின் பார்வை திரும்பியது. ஐ.நாடுகளில் சபையின் மனித உரிமை பிரகடனம் 1948ல் வெளியானது. இதில் சிறுவர் உரிமைகளும் அடக்கியபோதும் பொதுச் சபையில் 20ம் திகதி நவம்பர் மாதம் 1959ல் சிறுவர் உரிமைப் பிரகடனம் அங்கிகரிக்கப்பட்டு சிறுவரதும், பெரியவரதும் உரிமைகள் தனித்தனியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ் ஒப்பந்தத்தில் இலங்கை அரசும் 1991 யூலை 12ம் திகதி கைச்சாத்திட்டுள்ளதுடன் சட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

சிறுவர் எமது எதிர்கால வளர்ச்சிப்படிகள் இவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வளர்க்க வேண்டும். இவர்களுக்காக பெற்றோர் கண்ணீரும் வியர்வையும் சிந்தி கடினமாக உழைக்க வேண்டும்" தாய் குழந்தை பிறப்பை முன்னிட்டு ஏற்படும் மகிழ்வைவிட "பிள்ளை சான்றோன் என உலகு அழைக்கும்போதே மகிழ்வடைகின்றாள். ஒரு பிள்ளையின் எதிர்காலமானது உட, உள, அறிவு ரீதியாக உறுதிப்படுத்தப்படவேண்டும்.

எனவே ஆளுமைமிக்க சிறுவர்களை எமது நாட்டில் உருவாக்கி சிறுவர்களுக்கான உரிமைகளையும் கடமைகளையும் பொறுப்புடன் பெற்றுக்கொடுத்து எமது நாட்டில் சொத்தாகிய சிறுவர்களை கண்ணை இமை காப்பதுபோல் காக்கும் அளப்பரிய சேவை செய்வது எமது கடமை என்பதில் ஐயமில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வன் ராஜ்மோகன் பானுஜன்**
உயர்தர மாணவன்
கிளி / ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

# நமது உடலுக்குள் ஒரு வைத்தியர்

நமது உடலுக்குள்ளேயே இயற்கையாகவே ஒரு மருத்துவர் உருவாகி இருக்கிறார் அவர் எப்போதும் அதாவது 24 மணி நேரமும் நமது உடலின் இயக்கத்தை கண்காணித்துக் கொண்டே இருக்கிறார் நாம் நமது உடலுக்கு செய்யும் நல்லவை தீயவைகளை உற்று கவனித்து எங்கே கோளாறு ஏற்பட்டாலும் அடுத்த கணமே அந்த இடத்துக்கு தன் படை பட்டாளத்தோடு புறப்பட்டுவிடுவார் உடனடியாக அந்த கோளாயை சரி செய்வதற்காக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமே அந்த நடவடிக்கையை எடுத்து விடுகிறார்.

தானாகவே நம்முடைய உடலியக்கம் இடையுறாது நடைபெற அவரால் என்ன என்ன செய்யமுடியுமோ அத்தனையும் செய்கிறார். இவர் நம்மிடம் கேட்பதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அவர் செய்து கொண்டிருக்கும் நலமாக்கிகள் முயற்சிகள் எதையும் தடுக்காதீர்கள். குழப்பாதீர்கள் முடிந்தவரை உடலுக்குள் இருக்கும் மருத்துவர் செய்யும் நடவடிக்கைகளுக்கு உதவி செய்யவேண்டும்.

நம்முடைய உடலானது நோயில் இருந்து விடுபட்டு நலமடைவதற்கு செய்யும் முயற்சிகள் எவை என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும். நம்முடைய சமூக பழக்கவழக்கம் வேலை ஆர்வக் கோளாறு நம் உடல் மீதுள்ள அந்த நம்பிக்கை போன்றவற்றால் உடலுக்கு ஒவ்வாத பல செயல்களை பல நேரம் செல்கின்றோம் நாம் மனம் உவர்ந்து செய்கின்ற காரியங்களை உடலால் தடுக்கமுடியாது ஆனால் சிலவேளை தடுக்க முயச்சிக்கும்.

புகைப் பழக ஆரம்பிக்கும்போது இருமல், நெஞ்சு எரிச்சல், தடிமன் போன்ற நோய்கள் ஏற்படும். மது அருந்த பழகும் பொருட்டு வாந்தி, வயிற்றுப்போக்கு, உணவு பாதையில் எரிச்சல், தலைவலி, உடல்சூடு நீர்ச்சத்து குறைவதால் உடல் உலர்தல் என்று பல வலிகளில் நம்முடன் உடல்பேசி பார்க்கிறது. மன்றாடுகின்றது. ஆனால் விடாமல் பழகி உடல் இயக்கத்தின் ஆதாரங் களான கல்லீரல், சிறுநீரகம், நரம்பு மண்டலம் சிறுகுடல் எல்லாவற்றையும் பாழாக்கி விடுகிறோம்.

இது ஒருபுறம் இருக்க கெட்டுப்போன உணவு உடலுக்குள் விஷமாக மாறி உடல் நலத்திற்கு தீமை செய்துவிடக்கூடாது என்று உடல் மருத்துவர் உடனடியாக அந்த விஷயத்தை குடலில் உறிஞ்சிவிடும் முன்பு எச்சரிக்கை செய்கிறார் வயிற்றில் வலியை ஏற்படுத்துகின்றார் வயிறு கடாமுடா என்று இரைகிறது காலையில் எழுப்பிவிடுகிறது இப்படி உடலை காப்பாற்றுவதுதான் உடலுக்குள் இருக்கும் மருத்துவரின் வேலையாகும்.

எனவே உடலில் நாம் அன்பு செய்வோம் உடல் மருத்துவருக்கு உற்ற துணையான செயற்பாட்டை செய்வோம் நீண்ட ஆயுளுடன் வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**By: G.Abilashiny**
Grade 09
KN/ Jayapuram M.V.

# Friend

The days may more!
The clouds may be dark!!
The wares of sea may sleep quite...
But your memories are bright in my mind
I really expect that to never meet a
Friend as you in my life
Some on may expect the many
Some on may expect the past
But you didn't expect from me anything
Your friendship is very prom – as a milk
Your friendship is precious
This is the gift witch the god gave me
This birth I can't if for anyone
I pray the god for you
To live long period...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**By: G.Abilashiny**
Grade 09
KN/ Jayapuram M.V.

# Feelings Poem about Dad

Dad i really miss you!!!
it's hard for me to believe that
you are gone.....
it's seems like it was just yesterday
that is was talking and laughing
will you as a father and daughter.
we shared such a special bond
and i miss that the most....
i miss you!
i miss your voice!!
i miss your smile!!
i miss your smell!!
i miss your hug!!
i miss your jokes!!

I miss how you made me
feet I miss you everything





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி தனுஷா சதீஸ்வரன்
தரம் - 09
கிளி / ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

# சிந்தனைத் துளிகள்

எல்லா மனிதர்களையும் நம்பிவிடுவது ஆபத்து
ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து

மலிந்துவிடும் முகஸ்துதிகளையும் முழுப் பொய்களையும்விட
காயப்படுத்தினாலும் உண்மையே மேல்.

நீ தைரியமான மனிதன் உன்னால் சாதிக்கமுடியும்
இதற்கு மேல் ஒருவரை வாழ்ந்த வேறு வாசகம் தேவையில்லை.

முட்டாளைச் சமாளிக்க ஒரே வழி மௌனமாக இருப்பதுதான்

ஒருவன் அரசனாக வாழலாம் ஆனால் அவன்
மனிதனாகத்தான் இறக்க வேண்டும்.

நீ இறக்கும்போது உனக்காக அழக்கூடியவர்களை நீ
உயிருள்ள போதே தேடி வைத்துக் கொள்.

நம் எதிர்காலத்தை நாமே உருவாக்குகிறோம்
அதை விதி என்கின்றோம்

உலகை அறிந்தவன் வெட்கப்படமாட்டான்
தன்னை அறிந்தவன் அகம்பாவம் அடையமாட்டான்

படுக்கைக்குச் செல்வதற்கு முன்பாக கவலைகள் அனைத்தையும்
செருப்போடு கழற்றி வைத்துவிட வேண்டும்

நாலுநாள் பழகியிருந்தாலும் நல்லவன் நல்லதையே செய்வான்
நாற்பது வருடம் பழகியிருந்தாலும் கெட்டவன் கெட்டதையே செய்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி தயாதேவன் கம்சிகா
தரம் - 11
கிளி / ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

# முதியோர் நிலை

இன்றைய சமூகத்தில் முதியோர்கள் பலர் தம் குடும்பத்தினாலும் உறவினர்களாலும், சமூகத்தாலும் கைவிடப்படுகின்ற நிலையே காணப்படுகிறது. இன்றைய காலத்தில் நவீன தொழில்நுட்பங்கள் வளர்ச்சியடைதலும் முதியோர் கைவிடப்படுவதற்கான காரணங்களாகும். பல வசதிகளுடன் இருந்தாலும் பலர் முதியோர் இல்லங்களில் சேர்க்கப்படுகின்றனர்.

தமது குடும்பத்தைப் பராமரித்து வீட்டுப்பொறுப்புக்களை சுமந்து, தமது பிள்ளைகளின் கல்வி, தொழில் மற்றும் திருமணம் என சகல விடயங்களுக்காகவும் கைகொடுத்து கஷ்டம் வரும்பொழுதெல்லாம் நெஞ்சில் தட்டி ஊக்கப்படுத்தியவர்கள் என்னதான் பணம் இல்லையென்றாலும் பிள்ளைகளுக்காக வாழ்ந்த முதியோர்கள் கவனிப்பாரின்றி கைவிடப்பட்ட நிலையில்காணப்படுகின்றனர்.

பிள்ளைகளைப் பெற்றோர் ஒருபோதும் பாரம் என்று நினைப்பதில்லை. ஆனால் பிள்ளைகள் தான் பெற்றோரைப் பாரம் என்று நினைக்கின்றார்கள். பெற்றோரை ஒரு சுமையாக எண்ணியே அவர்களைக் கைவிடுகிறார்கள். எந்தப் பெற்றோரும் தமது வயோதிப காலத்தில் தம் பிள்ளைகளோடு இருப்பதையே விரும்புவார்கள். பெற்றோருக்குச் செய்யவேண்டிய கடமையானது பணத்தைக்கொடுத:து நிறைவேற்றும் ஒன்றல்ல. உணர்வுமிக்கதாகும்.

தமது சிறுவயதிலே பல செயற்பாடுகளைச் செய்தவர்கள். தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியவர்கள் அவர்கள் முதியவர்களாகிய பின் உடல், மனம் என்பன தளர்ந்துபோய் விடுகிறார்கள். அவர்களுக்குக் கைகொடுத்து உதவுவது சமூகத்தின் கடமையாகும். முதியோர்களிலும் பணமுள்ளவர்கள், பணமற்றவர்களாக இருக்கிறார்கள். பணம் இல்லாமல் இருப்பவர்களின் உணவு, உடை, உறையுள் போன்ற அடிப்படைக் காரணிகள் தீர்க்கப்படவேண்டும் அவர்களை அன்புடன் பராமரிக்க வேண்டும்.

முதியோர்களின் கருத்துக்கள் அவர்களின் அறிவுரைகள் என்பன அவர்களின் உள்ளத்திலிருந்து இயல்பாகவே வரும் வார்த்தைகளாகும். நவீன மாற்றம் காரணமாக தற்போதைய சிறுவர்களனைவருமே தொலைக்காட்சி பார்ப்பதிலேயே தமது கவனத்தைச் செலுத்துகிறார்கள், முதியோர்கள் கூறும் வார்த்தைகளுக்கு மதிப்பளிப்பதில்லை.

இனிவரும் காலத்திலாவது முதியோர்களின் வார்த்தைகளுக்கு மதிப்பளிக்கவேண்டும். முதியோர்களை நாம் அன்புடன் பராமரிக்கவேண்டும். முதியோர் இல்லம் என்ற சொல்லை இல்லாமற் செய்து முதியோர்களை அரவணைத்து அவர்கள் சுமை என்ற எண்ணத்தை ஒழிக்கவேண்டும். ஒரு முறையாவது அவர்கள் கூறும் நற்சிந்தனையைக் கேட்டு வாழ்வில் ஒரு சிறந்த நபராகவும் பாடசாலையில் சிறந்த மாணவராகவும், சமூகத்தில் நற்பிரஜையாகவும் வாழவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி நந்தபாலன் நிலாஜினி
தரம் - 12
கிளி / வேரவால் இ.ம.வி.

வாசிப்புமாத போட்டியில் முதலிடம்பெற்ற கவிதை

# இலக்கியங்களில் பெண்களின் முக்கியத்துவம்

உலகம் போற்றும் பெண்மையே!
உன் புகழினைப் பாடினால் என் மனம் மென்மையே
சூரியனின் ஒளிவீசும் ஒளிக்கற்றை போல,
பெண்ணின் புகழ் மற்றைய புகழினை மறைக்கின்றது!

வாழையடி வாழையாக பல இலக்கியங்களில்
அடிக்கடி பெண்ணானவளின் புகழினைப் போற்றுகிறோம்.
சிலப்பதிகாரத்தில் கண்ணகியை
காவியத் தலைவியாக்கியது இளங்கோவின் பெரும் புரட்சியாகுமே!

மொழிகள் பலவற்றில் பெண்மையின் மகிமையை
அழகாகக் கண்டு சிலிக்கின்றோம்
அறம்பாடி அரசரின் புறம்சாடிப் பாடுவதனை
கன்னல் மொழியினூடாகக் காண்கின்றோம்.



கற்பிற்கு மட்டும் கண்ணகியைப் போலும்
மற்றவற்றில் மடமகளினைப் போலும்
இருக்கவேண்டும் என்று இளங்கோ
பெருமையாக புரட்சி செய்தாரே!

விஞ்ஞானத்தின் விந்தைகளாகவும்
இவ் அறியா உலகத்தின் சிங்கப் பெண்களாகவும்!
திரண்டு ஒன்று சேர்ந்து
இப்புவனத்தை நித்தம் நித்தம் முத்தம் இட்டார்கள்.

அடுப்பங்கரையிலே அடங்கிக் கிடப்பது அல்லாமல்
ஆன்றோர், சான்றோர் போற்றும் அக்கனியே!
மாற்றம் ஒன்றே மாறாது என்று கூறி
மற்றவர்களையும் துலக்க வைத்தவளே!

அன்னையே! எனப் போற்றும்,
அன்னை தெரேசாவே!
உம் புகழ் எண்ணக் கணக்கற்றதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் புகழினை காண நாம் முயலுவோம்!
தத்துவங்கள் பல காணப்பட்டாலும்
நீ தத்துவ வடிவமாகவே காணப்படுகின்றாய்
தாய்க் குலமே தாயக்குலமே உன் கவிபாடுவதில்
இனமத குலமே பெருமை கொள்கின்றது.

பெண்ணே! உன் புகழினை
சீத்தலைச் சாத்தனார் நன்றாகச் சாத்துகின்றார்!
மணிமேகலையில் மணிமாலை போன்ற
உன் அருமை அறச்செயல்களை காண்கின்றோம்.

இவ் இணையா உலகில்
இரட்டைக் காப்பியங்களில்
போற்றியது போன்று உன் புகழினையே!
கற்று மகிழ்கின்றோம்.

கனவுலகில் வாழாது
நினைவுலகில் செய்து காட்டும்
பெண்மையே நாம் போற்ற
வன்மையாக கை கோர்க்கின்றோம்.

போர்க்களத்தினை பெண்ணின் பார்வையில்
காந்தக்களமாக மாற்றும் திறமை தான் என்னே!

காலம் சென்றால் பெண்ணின்
கோலம் மாறாது என்பதனை
எடுத்துக் காட்டாக ஒரு சிலர்
கூட்டுக்கூட்டாக புலப்படுத்தினர் பெண்ணின் மகிமையை!

அன்பின் அடிமையாகவும்,
குலத்தின் தாயாகவும்
அகிலம் போற்றும் நாயகியாகவும்
பெண் இனம் போற்றிப் பாடப்படுகிறது.

நீதிக்காகப் போராடுப வளாகவும்
நீதிமன்றத்தில் நீதி தேவதையாகவும்,
நம் பெண் தேவதை
விளங்கி பொலிவு கண்டார்.

சூடித்தந்த கூடர்கொடி என்றும்
நாச்சியார் என்றும்,
திருப்பாவையிலே ஆண்டாள்
பெருமை பெரும் பாக்களால் பாடப்படுகிறது!

அகிலம் போற்றும் சிங்கப் பெண்ணே!
நீ சிங்க அவதாரம் என்று
அனைவருக்கும் புலப்படுத்தி
பெண்ணே நீ வாழ்க!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி பரமநாதன் ஹஜாந்தவதனி
தரம் 11
கிளி/ வேரவில் இந்த மகாவித்தியாலயம்.

வாசிப்புமாத போட்டியில் முதலிடம்பெற்ற துண்டுப்பிரசுரம்

# பிளாஸ்டிக் என்னும் கொடிய அரக்கனை பூண்டோடு ஒழிப்போம்!!!

அன்பார்ந்த பொது மக்களே!

பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையால் ஏற்படும் தீங்குகள் பல. பொலித்தீன் பிளாஸ்டிக் பாவனையால் எதிர்காலத்தில் நாம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். பிளாஸ்டிக்கினால் பூமித்தாய் மூச்சுவிட முடியாமல் திணறுகின்றாள். பிளாஸ்டிக் அரக்கனை அழிக்க பொதுமக்கள் உங்களது ஒத்துழைப்பு மிக அவசியம்.

**பிளாஸ்டிக்கினால் ஏற்படும் தீமைகள்!**

- விலங்குகள் உணவுடன் சேர்த்து உட்கொள்வதால் உணவுக் குழாய் அடைபட்டு துன்புறவும், மரணிக்கவும் நேரிடும்.
- பொலித்தீன், பிளாஸ்டிக் உருக்கும்போது பல்வேறு நச்சு வாயுக்கள் வெளியேறுகின்றது.
- மண்ணின் தன்மை, மண்ணின் சத்துக்களுக்கு தீங்கு விளைவிக்கின்றது.
- நிலத்தடி நீரைப் பாதிக்கின்றது.
- புற்றுநோய்க்கு பிரதான காரணம் பிளாஸ்டிக் ஆகும்.
- ஓசோன் படலத்தை பாதிக்கும்.

**பிளாஸ்டிக்கின் விலையோ மலிவு அதன் விபரீத விளைவுகளோ அதிகம் அவற்றைத் தடுக்கும் வழிகள்.**

- பொலித்தீன், பிளாஸ்டிக்குகளை உரிய குப்பைக் கூடைகளில் இடல்.
- கடைகளுக்கு செல்லும்போது துணிப்பைகளை எடுத்துச் செல்லல்.
- பிளாஸ்டிக் பாத்திரங்களக்கு பதிலாக கண்ணாடி, சில்வர் பாத்திரங்களை பயன்படுத்தல்.
- சாப்பிடுவதற்கு வாழை இலை, தாமரை இலை பயன்படுத்தல்.
- மரத்திலான பொருட்களை பயன்படுத்தல்.

போன்ற செயற்பாடுகளின் மூலம் பிளாஸ்டிக் பாவனையை தடுக்கலாம். பிளாஸ்டிக் ஆனது புவிச் சூழலை பாதிக்கும் முக்கிய காரணியாகும். பிளாஸ்டிக் ஆனது விரைவில் உக்கும் தன்மை அற்றது. இதுவே சுகாதார கேட்டிற்கும் சூதறியா நாட்டிற்கும் சகுனி! எனவே பிளாஸ்டிக்கினை ஒழித்து சூழல் சுத்தம் பேணிட இன்றே உறுதி பூணுவோம்.

ஓசோனை ஓட்டை ஆக்கும்
மண்ணை மலடாக்கும்
கொடிய அரக்கனை அழிக்க
எடுப்போம் புது அவதாரம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி தர்மராசா லோகேஸ்வரி
ஜெயபுரம் தெற்கு.

# சமையல் குறிப்பு

## வேப்பம்பூ வடகம்

**தேவையான பொருட்கள்**



| | | |
|---|---|---|
| உழுத்தம் பருப்பு | - | 1 சுண்டு |
| வேப்பம் பூ | - | 2 சுண்டு |
| பச்சை மிளகாய் | - | 100 கிராம் |
| வெங்காயம் | - | 100 கிராம் |
| நற்சீரகம் | - | 1 மே.க |
| மிளகு | - | 1 மே.க |
| மல்லி | - | 1 மே.க |
| தனிமிளகாய்த்தூள் | - | 1 மே.க |
| துப்பரவாக்கிய எள்ளு | - | 100 கிராம் |
| சிறிதாக வெட்டிய உள்ளி | - | 1 தே க |
| உப்பு | - | தேவையான அளவு |
| கறிவேப்பிலை | - | 3 நெட்டு |


**செய்முறை:-**


- வேப்பம் பூவைக் கழுவிக் காயவைத்து எடுத்துக் கொள்க.
- உழுத்தைத் துப்பரவாக்கிக் கழுவி 3 மணி நேரம் ஊறவைத்தெடுத்து முக்கால் பதமாக அரைத்தெடுத்துக் கொள்க.
- வெங்காயம், பச்சைமிளகாய் என்பவற்றை துப்பரவாக்கி கழுவிச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்க.
- சீரகம், மிளகு, மல்லி, தனிமிளகாய்த்தூள் என்பவற்றை அளவிற்கு நீர் சேர்த்து பசுந்தையாக அரைத்தெடுத்துக் கொள்க.
- பின் பாத்திரத்தில் அரைத்த உழுந்தைப் போட்டு வேம்பம்பூ வெட்டிய வெங்காயம், பச்சை மிளகாய், எள்ளு, உள்ளி சிறிதாக வெட்டிய கறிவேப்பிலை அளவிற்கு உப்பு என்பவற்றையிட்டு நன்றாக பிசைந்து குழைத்துக் கொண்ட பின்பு தேசிப்பழமளவு உருண்டைகளாக உருட்டி மெதுவாகத் தட்டி வெய்யிலில் நன்றாகக் காயவைத்தெடுத்து தேவையான போது பொரித்தெடுத்துப் பயன்டுத்தலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி லக்சன் டயானி**
பொறுப்பதிகாரி,
பல்லவராயன் கட்டு உப அலுவலகம்.

# கடந்துபோன காலங்கள்

அம்மானை அழைத்த காலம் அன்றோடு போயாச்சு
மும்மாரி பொழிந்த காலம் முன்னோரோடு போயாச்சு
கண்மாயி குளமெல்லாம் என்னோடு காஞ்சுபோச்சு
பின்வரும் குழந்தைகளுக்கு கடந்துபோன காலங்களை
கண்முன்னே காட்டுவதற்கு கவிதையோடு இங்கு வந்தேன்.

தம்பி அழுகிறான் என்று துப்பி பிடித்த காலம்
ஒற்றையடி பாதையிலே பத்திரமாய் நடந்த காலம்
பட்டாம் பூச்சிகளைப் பிடிக்கப் படையெடுத்து போன காலம்
கட்டாந்தரைகளிலே பெண்கள் பல்லாங்காய் ஆடிய காலம்
கண்முன்னே நிற்குதையா கடந்துபோன காலங்கள் எல்லாம்.

எட்டாத பழத்தைகூட ஒருவர் மீது ஒருவர் ஏறி
தட்டிப்பறித்து தின்ற காலம்
தொட்டாஞ்சிணுங்கியை மெல்ல மெல்ல
தொட்டுப் பார்த்த காலம்
பட்டம் பறக்க விட்டுப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்த காலம்
அரைக்கால் ரவுசர் போட்டு ஆடிப் பாடி ஓடின காலம் இப்படி
கண்முன்னே நிற்குதையா கடந்துபோன காலங்கள் எல்லாம்.

கும்மிப்பாட்டு பாடும் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்து போச்சு
அம்மியே அரைத்த சமையல் அம்மாவோடு போயாச்சு
நம்பி வந்த நாலுபேரை திண்ணை வைத்த காலம் போச்சு
பொய்க்கால் குதிரையும் புலிவேசமும் திருவிழாவில் காணாமல் போச்சு
கண்முன்னே நிற்குதையா கடந்து போன காலங்களெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்க்கால் வரம்புகளை வரும்கால சந்ததி பார்க்கமுடியாத காலமாச்சு
சில்லறையை கையில் வைத்திருந்தும் செலவு செய்யத் தெரியாத காலம் போச்சு
நோய்க்குப் பாட்டி வைத்தியம் நொடியில் பறந்து போயிடும் அதையெல்லாம் ஓட்டியாச்சு.
தொலைக்காட்சிப் பெட்டியொன்றை ஒரு பஞ்சாயத்தே பார்த்து மகிழ்ந்த காலம் போச்சு.

சேவல்கூவி விடிந்த காலம் சிட்டுக்குருவி பாடிய காலம்
கொட்டும் மழையில் நனைந்து கொண்டு காகிதக் கப்பல் விட்டகாலம்
தொலைதூரம் என்றாலும் நடந்தே சென்று வந்த காலம் - அன்று
தோழ் மீது அமர்ந்து கொண்டு திருவிழாவைப் பார்த்த காலம் - இப்படி
எத்தனையோ காலங்கள் கண்முன்னே நிற்குதையா
கடந்துபோன காலங்களெல்லாம் கண்முன்னே நிற்குதையா.

இன்று இரட்டையடை பின்னலும் இல்லை ரவிக்கைபோட்ட தாவணியும் இல்லை
ஸ்ரெட் கட்டில் தலையும் இல்லை பெல்ஸ்வைத்த பாண்டும் இல்லை
நான் தடவிக் கூடிப் பேசினாலும் அவைஎல்லாம் திரும்பிவரப் போவதில்லை
கண்முன்னே நிற்குதையா கடந்துபோன காலங்களெல்லாம்

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி சந்திரகாசன் அஜந்தா
தரம் - 13
கிளி/ வேரவில் மகா வித்தியாலயம்

வாசிப்பு மாதப்போட்டியில் முதலிடம்பெற்ற கவிதை

# பெண்ணியம்

வாழையடி வாழையாக
உலகம் போற்றும் பெண்ணவளே!
உந்தன் தைரியத்தின் தன்மை கருதி
உனை உலகு போற்றும்
விந்தை கண்டேன்.

உன் முக்கியத்துவத்தை இலக்கியங்கள்
பலவாறாக கவிபாட
இதில் இளங்கோவும் உன்புகழ் பாட
கற்பிற்கரசியாய் கண்ணகி தோன்றினாள்
கோவலனின் கற்பிற்குரிய மனைவியானாள்



தாய்க்குலத்தின் விந்தையென
தரணியில் பெண்ணென அவதரித்தாய்
பல பதவி, உயர்வு கண்டாய்
பின் பல சாதனை கண்டு
உலகில் வாழ்பவளே!

பெண்ணே உன்புகழை வைரமுத்து
சிறப்பான மொழியிலே கையாள
அவன் உனைத் தாயே என போற்றுகிறான்
தாய்க் குலமே தாய்க்குலமே தங்கள்
மகன் சொல்கிறேன்
கற்பில் மட்டும் கண்ணகியை போலிரு
என சிந்தை மொழியில் கவிபாடி
பெண்ணே! உன் முக்கியத்துவத்தை
உலகெங்கும் போற்றச் செய்தான்.

பெண்ணே! அவனி உனைக்கண்டு
ஆனந்தம் அடைகிறது
அகிலம் போற்றும் நாயகியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மை அறிஞர்கள் பலவாறு போற்ற
பூமியில் பூங்கொத்தாய் மலர
பல தடை தாண்டி புவியில் அவதரித்தவளே
பெண்ணே உனை சீத்தலைச் சாத்தனும் போற்றினான்
அவன் பதித்த மணிமேகலையாம்
இரட்டைக் காப்பியத்தில் ஒன்று
மணிமேகலா உன் புகழ் பாடினான்.

பெண்ணே நீ புன்னகை பூத்திடவும்
அன்பைப் புகட்டும் அன்னையாகவும்
வழிகாட்ட வந்துதித்த பெண் தாயவளே
உனை இலக்கியம் போற்றுவதில்
எக்குறையும் இல்லை.

பெண்ணவளே அகிலம் போற்றும் நாயகி நீ
அன்பின் மொத்த வடிவ தேவதை நீ
இவ் உலகம் உனைப்போற்ற
வந்துதித்த தாயவளே.

பெண்ணே நீதியின் முழு மொத்த வடிவம் நீ
அன்பிற்கு அடிமையானாய்
அதிகாரத்திற்கு எதிர்ப்புக் கண்டாய்
உன் நீதி தவறென்று எவ் உத்தமன் கூறுவான்.

பெண்ணே! உன்
புன்னகை கண்டு உலகு பொறாமை கொள்ள
உன் வலியை மறைத்து, மறந்து
உலகம் போற்ற நிற்கும் நாயகியே.

பெண்ணே! நீ
பலபாடு பட்டு நல்வாழ்வு வாழ
உன் வாழ்க்கைப் பயணத்தில்
பின் தொடர்ந்து செல்பவளே.

உனை இலக்கியம் புகழ்வது மட்டுமன்றி
என் கவியில் உன்புகழ் பாட
பெருமிதம் கொள்கிறேன் பெண்ணவளே!

இலக்கியம் போற்றும் தாயவள் நீ
உன் புகழ்பாட வையத்தில் மொழி இல்லை.
உன் சாதனை மேல் நோக்கிச் செல்ல
வாழ்த்தி நிற்கிறேன் உன் புகழ் பாடி.

பெண்ணவளே நீ வாழ்க!
உன் சிறப்பு வளர்க.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வீ புவிதரன் சௌமியா
இல. 20, சோலை பல்லவராயன்கட்டு

# பதிவுகளும் பகிர்வுகளும்

நேற்றுவரை
சேற்றில் ஒரு கால் ஊன்றி
வள்ளத்தில் மறுகால் வைத்து
சங்குப்பிட்டித்துறையில் இருந்து
காற்றசைத்து வள்ளம் ஆட
அக்கறை போனோம்
பஸ் வண்டிக்கும் வள்ளத்திற்கும்
காத்திருந்து காத்திருந்து
கண் பூத்தோம்
இன்று இங்கு எழுந்தது
உயர்ந்த பாலம்
நீண்ட பயணம்
மணித்துளியாய் சுருங்கியது
பார்! பாரத்தைத் தாங்கிப்
பாலத்தில் ஓடும் வண்டி
பார்! அயலூராய் தெரியுது யாழ்ப்பாணம்
பூநகரி வரலாற்றில்
பொறிக்கப்பட்டுவிட்டது
கேரதீவு சங்குப்பிட்டிப் பாலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வி சுதர்சன் கவிஷா**
தரம் - 07
கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்.

# மூன்றெழுத்து கவிதை

"அம்மா" எனும் மூன்றெழுத்தில் பிறந்தேன்.

"அப்பா" எனும் மூன்றெழுத்தில் பாதுகாப்பை பெற்றேன்.

"பாசம்" எனும் மூன்றெழுத்தில் வளர்ந்தேன்.

"பள்ளி" எனும் மூன்றெழுத்திற்கு சென்றேன்.

"கல்வி" எனும் மூன்றெழுத்தை கற்றேன்.

"அறிவு" எனும் மூன்றெழுத்தை பெற்றேன்.

"புகழ்" எனும் மூன்றெழுத்தை வாங்கினேன்.

"கனவு" எனும் மூன்றெழுத்தை சிந்தித்தேன்.

"தொழில்" எனும் மூன்றெழுத்திற்கு சென்றேன்.

"பணம்" எனும் மூன்றெழுத்தை பெற்றேன்.

"ஓய்வு" எனும் மூன்றெழுத்தை அடைந்தேன்.

"வாழ்வு" எனும் மூன்றெழுத்தை முடித்தேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி தனபாலசிங்கம் தமிழினி
தரம் - 08
கிளி / ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

# நூலகம்

கோடியறிவு கிடைத்திடவே
நீ புத்தகம் வாசி

பூரண மனிதனாய்
நித்தம் ஒரு புத்தகம் வாசி
வளரும் விரைவில் அறிவு.

ஆயிரமாயிரம் கதையும்
அறிவுரையும் சொல்லும்
நல்ல புத்தகம்
தினந்தோறும் புது தகவல்
அறியாத பல தகவல்
நான் தருவேன் எனச் சொல்கிறது நூலகம்.

நாவல், கவிதை, சிறுகதை எனப்
பல்துறை இலக்கியம் தருவேன்
உலகம் அறிய வைப்பேன்
என்கிறது நூலகம்
தொலைக்காட்சி தொலைபேசி
தவிர்த்து புத்தகம் வாசிப்பாய்
சான்றோனாய் நீ உயர்வாய்.

சாதனை உலகில்
சான்றோனாய் நீ வளர
நாள்தோறும் புத்தகம் வாசி
நன்மதிப்புடன் நீ வாழ்வாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி சிவநேசன் நிவேதா
தரம் - 08
கிளி / ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

சிறுவர் கதை

# பெற்றோர் சொல்லை கேட்க வேண்டும்

ஓர் ஊரில் சின்னையா என்று ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரின் மனைவி சின்னமணிக்கு பிள்ளையே கிடையாது. அதனால் அவர்கள் இருவரும் ஒரு அநாதை குழந்தையை வளர்த்தனர். அவனுக்கு பெயர் சிகாமணி என்று பெயரை சூட்டினார். அவன் நன்றாக படித்தான் ஆனால் சிகாமணி பெற்றோர் சொல்லை கேட்கமாட்டான். அப்போது கொவிட் - 19 எனும் புதிய நோயினால் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர். அப்போது சின்னையா தன் மகனிடம் ஏ சிகாமணி இங்கே வா என்று கூப்பிட்டார். அங்கே வந்த சிகாமணி ஏனப்பா கூப்பிட்டிங்கா, என்று கேட்டான். இப்போது கொவிட் - 19 இந்த உலகத்தில் தலைவிரித்தடுகிறது அதனால் நீ எங்கையும் போகும்போது முகக்கவசம் போட்டுக்கொண்டு போ மற்றும் அங்கு சரியான இடைவெளியை பேணு அடிக்கடி கைகளை நன்றாக கழுவவேண்டும் என்று சொன்னார். அப்போது சிகாமணி இது எனக்கு தெரியாதா? என்று எரிச்சலுடன் பதிலாளித்தான். அப்போது சின்னையா சரிசரி கோபப்படதே என்று கூறினார். அடுத்தநாள் சிகாமணிக்கு ஒரு கடிதம் வந்தது அதில் அன்புள்ள சிகாமணிக்கு எனது பிறந்தநாள் நாளை நீ காட்டயம் வரவேண்டும் என்று எழுதியிருந்தது. அவன் உடனே தன் அப்பாவிடம் நடந்த விடயத்தை கூறினான். அவனுடைய அப்பா சரி மகனே நீ போய் வா? ஆனால் நான் சொன்ன விடயங்களை கடைப்பிடிக்கவேண்டும் என்றார். சரியப்பா இதை எத்தனை தடவை சொல்வீங்க என்று எரிச்சலுடன் சொன்னான். சரிசரி கோபிக்கதே என்று அவனின் அப்பா சின்னையா சொன்னார். அடுத்தநாள் சிகாமணி தனது நண்பனின் வீட்டுக்கு சென்றான். அங்கு ஜாலியாக விழாவை கொண்டாடினான். அவன் அப்பா சொன்ன எதையும் பின்பற்றவில்லை.

அவன் வீட்டிற்கு வந்தான். அடுத்த சில நாட்களில் கடுமையான தும்மல் கடுமையான சுவாச அடைப்பு என்பன ஏற்பட்டது. சின்னையா சிகாமணியை வைத்தியாசாலைக்கு அழைத்துச் சென்றார் வைத்தியர் சிகாமணிக்கு கொவிட் - 19 தோற்றியுள்ளது. அதனால் உங்களை தனிமைப்படுத்த வேண்டும் என்றார். அதோடு சிகாமணியோடு பழகியவர்கள், குடும்பம், நண்பர்கள், நண்பர்களின் உறவுகள் போன்றவர்களை தனிமைப்படுத்தினார்கள் இதனால் சிகாமணி மிகவும் கவலையுற்றான். தன் தந்தை சொல்லை கேட்டிருந்தால் இப்படி நடந்திருக்குமா? என்று கவலையோடு இருந்தான்

சிறுவர்களே! சிறுமிகளே!
சிகாமணி பெற்றோர் சொல்லை கேட்காததால்
என்னவாயிற்று என்று இனிமேல் நீங்களும்
இந்த சிகாமணி செய்தது போல் செய்யாதீங்கா
பெற்றோர் சொல்லை கேட்டு நடங்க சரியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வன் ஐங்கரன் லதிசன்**
இல. 30, ஜெயபுரம் தெற்கு,
பல்லவராயன் கட்டு.

# கழிவுப் பொருட்களை பயன்படுத்தி பயிர்ச்செய்கை மேற்கொள்ளல்

எம்மால் எம்மைச் சூழவுள்ள சுற்றுச் சுழலில் பல்வேறு நிகழ்வுகள் ஒவ்வொரு கணமும் இடம்பெற்ற வண்ணமே இருக்கின்றன. இவற்றின் காரணமாக

"பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்.

எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான்"

என விஞ்ஞான யுகத்தை நோக்கி காலடி வைத்த மனிதன் விண்ணைக்கூடத் தொட்டுவிட்டான் இவ்வாறு நகரும் நகர்வினால்.

"உலகமே உள்ளங்கையில் சுருங்கிவிட்டது"

பாலை வனத்திலும் பனிமூட்டத்திலும்கூட கைவரிசையைக் காட்டிவரும் மனிதனின் வாழ்வின் எம்மை வழிநடத்தும் சக்தியானது.

"எம்மை வழிநடத்திச் செல்கின்ற தென்பதுவும் மறுப்பதற்கில்லை

எனவே நாமே கண்டு பிடித்த ஒவ்வொன்றும் எமது தேவைகளை அவ்வப்போது பூர்த்தி செய்திடவும் சூறாவளி, வெள்ளப்பெருக்கு, ஆழிப்பேரவை என்பவற்றினாலும் வேறு விதங்களிலும் நகர மயமாக்கலை அடுத்து நரகமயமாகும். நிலையினை மாற்றியமைப்பதற்காக இயற்கைக் கழிவுப் பொருட்களிலும் சரி செயற்கைக் கழிவுப் பொருட்களையும் நாம் திட்டமிட்ட பல்வேறு விதமாக பயிர்ச்செய்கை மேற்கொள்ளமுடிகின்றதும் நாம் மறுப்பதற்கில்லை.

அந்த வகையிலே இயற்கைக் கழிவுகள் (பசளை) தேங்காய் மட்டை இளநீர்க்கோதுகள், கமுகு மடல்கள், வாழைக் குற்றி (தடல்கள்) மரக்கொட்டுகள் போன்றனவும் செயற்கையான டயர்கள், தயிர்ச்சட்டிகள், யோக்கட் கோப்பை, தகரப் பேணிகள் (சமன்ரின், மாப்பேணி), மழைப்பீலி, பிளாஸ்ரிக் கோப்பைகள், பைகள், வாளி போன்றன அடங்குகின்றன.

இவற்றை நாம் ஒழுங்கு சேர்ப்பதனூடே தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிகளை திட்டமிட்டு வெற்றி கொள்ளமுடியும். கழிவுப் பொருட்களை இலவசமாகவே நாம் பெற்றுக்கொள்ள முடியும். தற்போது பணத்தை இதற்காகச் செலவு செய்வது அவசியமற்ற ஒன்றாகவே காணப்படுகின்றது. இதனை இன்றைய கல்வித் திட்டத்திலும் புகுத்தப்பட்டிருப்பதனை நாம் கண் ஊடாக காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3R) வீட்டுத்தோட்டம் தொடர்பாக 3R எண்ணக்கரு மூலம் (Reduce, Reuse Recycle) என்பவற்றினூடே வீட்டுத்தோட்ட ஆர்வத்தைத் தூண்டி ஒன்றுக்கு பயன்படுத்திய ஒரு பொருளை மற்றொன்றுக்கு பயன்படுத்துதல், நாளாந்தம் பயன்படுத்திய பின் கழிவுத் தொகுதிக் பொருட்களைக் கொண்டு பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான சாடிகள் தயாரித்தும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் மீள்சுழற்சி முறை என்பதாகும்.

இதனை கடந்த காலங்களில் எமது நாட்டில் வீட்டில் கிடைக்கும் கழிவுப் பொருட்களை எவ்வாறு கூட்டெரு வாக்கமுடியும் என்பதனை ஒவ்வொரு கமநல சேவை நிலைய உத்தியோகத்ர் மூலமாகவும் பயிற்சியளிக்கப்பட்டமையும் இங்கு நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

வீட்டை அழகுபடுத்துவற்காக கறிமிளகாய், மிளகாய், தக்காளி என்பன பயிரிடப்படுகின்ற போதினிலும் கூட்டெரு தயாரித்து பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதுடன் இயற்கைப் பீடை கட்டுப்பாட்டுத் திரவங்களாகக்கூட வேப்பம் வித்துக் கரைசல், விறகுச் சாம்பல், வேப்பெண்ணெய்க் கரைசல் மாட்டுச் சிறுநீர் என்பவற்றையும் பயன்படுத்தமுடியும் இவற்றின் பயன்பாட்டின் மூலமாக மண்ணிற்கு பாதிப்பு ஏற்படாது. இடவசதி குறைவான இடங்களிலும் பயிர்களை வளர்ப்பதற்கான (நடுவதற்கான) மாற்றுவழிகளாகவும் தேவைக்களுக்கேற்றாற்போல இடம் விட்டு இடம் பெயரக்கத்தக்கதாகவும் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இடவசதி குறைவாக இருப்பவர்க்கு மாற்று முறைகளில் பயிர்களை நாட்ட முடிவதோடு குறைந்தளவிலேயே நீர்த்தேவைகளும் காணப்படத்தக்க ஓர் முறையாகும். பீடைப் பாதுகாப்பு முறையாகும். சிறந்த மட் பாதுகாப்பு முறையாகும். சூரியஒளிபடும் இடங்களைக்கூட நினைத்த நேரத்தில் பொருத்தமுற மாற்றமுடியும். பாதுகாப்பு வேலிகளையும் சுலபமாக அமைத்துக் கொள்ளமுடியும். மனிதவள முகாமைத்துவம் இங்கு பெரிதளவில் செல்வாக்குச் செலுத்துவது கட்டுப்படுத்தப்படும் உற்பத்தித் திறன் அதிகரிக்கும். கையாண்டு பார்த்தவர்களை மேற்கொள்ளவும் முடியும்.

சமையல் நடவடிக்கைக்குத் தேவையான கறிவேப்பிலை, றம்பை, சேம்பு, புதினா, பெசில் என்பவற்றையும் இஞ்சி, மஞ்சள் போன்ற செடிகளையும் ஒரே சாடியில் நாட்டியும் எமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் முடியும். இவற்றை கழித்தொதுக்கப்பட்ட பிரப்பங்கூடை மண்சட்டி போன்றவற்றையும் பயன்படுத்தமுடியும். இது ஓர் செயன்முறைத் தொழில்நுட்பமும் கூடவேயாம்.

எனவே கழிவுப் பொருட்களை உரிய வகையில் பயன்படுத்தி எம் வாழ்வை வளமாகிடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி தனேஸ்வரன் ரேணுகா
தரம் - 08
கிளி / கிராஞ்சி அ.த.க. பாடசாலை.

# எதிர்காலத்தில் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்கும்

இனிவரும் காலத்தில் ஒரு அறிவார்ந்த சமூகம் உருவாக வேண்டுமானால் இன்றைய சிறுவர்கள் சிறப்பான முறையில் கல்வியை கற்க வேண்டும். இதனை எமக்குள் பதியச் செய்யும் பொருட்டு அரசாங்கம் ஆறு வயது தொடக்கம் பதினெட்டு வயதுவரை இலவசமாகக் கட்டாயக் கல்வியை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் பொருட்டு பாடசாலைகளுக்கு சீருடைகள், பாதணிகள், பாடநூல்கள் என்பவற்றையும் எமக்கு கொடுத்துள்ளது. எனவே இவற்றை பெற்று பாடசாலைகளுக்கு ஒவ்வொரு நாளும், நேரத்துடனும் செல்லுதல் வேண்டும். எனவே பாடசாலைக்கு ஒழுக்காக சென்று எதிர்காலத்தில் ஒரு அறிவார்ந்த சமூகம் உருவாக நாமும் பங்களிப்புச் செய்வோம்.

ஆனால் அறிவார்ந்த சமூகத்திற்கு கல்வி மட்டுமன்றி ஒழுக்கம், பொறுமை, வார்த்தைப் பிரயோகம், தலைமைத்துவம், உயிர்களிடத்தில் அன்பு காட்டல், சட்டதிட்டங்களை மதித்தல், முதியோர்களுக்கு உதவுதல், முதியோர்களுக்கு மதிப்பளித்தல் என்பனவும் கற்றலுடன் விருத்தி செய்யவேண்டிய பண்புகளாகும். எனவே இவற்றை எமக்கு வழக்குகின்ற நிலையமாகவும் பாடசாலை மற்றும் சமய அறநெறிப் பாடசாலைகள், ஆசிரியர்களின் அறிவுரைகள் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன.

ஆனால் இவற்றை உணர்ந்து கொள்ளாத சிலர் பாடசாலை இடைவிலகல், ஆசிரியர், பெற்றோர்களின் வற்புறுத்தல்களிற்கு உள்ளாகி பாடசாலைக்கு சமூகமளிக்கின்றனர். பாடசாலை இடைவிலகிய மாணவர்கள் மதுபானம் அருந்துதல், போதைப்பொருள் விற்பனை, கொலை, களவு, கடத்தல் போன்ற இழிவான விடயங்களில் ஈடுபட்டு கைதுசெய்யப்பட்டு சிறுவயதிலே நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு நாட்டில் ஏற்றுக் கொள்ளப்படாத நபர்களாகவும் மாறுகின்றனர். இவர்களால் தான் இன்றும் எதிர்காலத்தில் அறிவார்ந்த சமூகம் உருவாகுமா? என்ற கேள்வி எம்மில் மட்டுமன்றி எல்லோர் மனதிலும் ஒரு கேள்வியாகவே இருந்து வருகிறது. இக்கேள்விக்கு நாம் விடைகாண வேண்டுமானால் இன்று நாம் சிறந்த முறையில் கல்விகற்று எதிர்காலத்தில் ஒரு அறிவார்ந்த சமூகத்தை உருவாக்கவேண்டும்.

எனவே நாட்டில் மதுபானம் விற்பனை மதுபானம் அருந்தும் நபர்களை சட்டத்திடம் ஒப்படைத்து அவர்களையும் ஒரு நல்ல நபர்களாக்கி எதிர்கால அறிவார்ந்த சமூகத்தில் அவர்களையும் ஒரு அங்கத்தவர்களாக மாற்றப்படவேண்டும். எனவே இன்று ஒருவன் கூலிக்கு வேலை செய்பவனாக காணப்படுவனானால் அவன் தனது பள்ளிப் பருவத்தை அலட்சியம் செய்துள்ளான், என்றுதான் பொருட்படும். இளமையிற் கல்விசிலையில் எழுத்து என்று காரணமின்றியா சொன்னார்கள். இல்லையே பொருள் என்னவென்றால் உரிய வயதில் உரிய பருவத்தில் தமது கல்வியை ஒருவன் சிறந்த முறையில் கற்பானானால் அவன் மூலம் தான் எதிர்காலத்தில் ஒரு அறிவார்ந்த சமூகத்தை கட்டியெழுப்பமுடியும். எனவே இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் இன்று நாம் சிறுவர்களாக இருக்கலாம். நாம் ஒரு தந்தையாகவோ, தாயாகவோ உருவாக்குவோம். அப்பொழுது தான் எம்மால் புரிந்துகொள்ளமுடியும் நாம் எவ் நிலையில் இருக்கிறோம் என்பதனை எனவே முன்பு கூறிய கூற்றை பொருள் அறிந்துதான் அரசாங்கத்தால் கூறப்பட்டுள்ளது. சிறப்பான முறையில் கல்வியை மேற்கொண்டு எதிர்காலத்தில் எல்லோரும் வியக்கத்தக்க ஒரு அறிவார்ந்த சமூகத்தை உருவாக்க நாமும் பங்களிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகிழினி அன்னக்கொடி,**
ஜெயபுரம்.

# பாடசாலை மாணவர்களின் இடை விலகலும் காரணிகளும்

இலங்கையில் இலவச கல்வி முறையானது காணப்படுகின்றது. இதன் மூலமாக வறிய மக்களை சமூக மற்றும் பொருளாதார ரீதியாக வலுவூட்டல் நிகழ்ச்சி திட்டமானது நடைபெற்றுக் கொண்டு வருகின்ற பொழுதிலும் மாணவர்கள் மத்தியில் கல்வி சார்ந்த பிரச்சினைகள் பல எழுந்த வண்ணம் உள்ளன. இலங்கையில் அண்மைக் காலமாக அதாவது 2019 தொடக்கம் 2022 வரையான காலப் பகுதிகள் பல பிரச்சினைகளை எதிர் கொண்ட நாடாக காணப்பட்டபடியால் இங்கு கோவிட்-19 பொருளாதார சிக்கல்களை நாட்டில் ஏற்படுத்தியதுடன் கல்வி உள்ளடங் களாக பல துறைகளையும் முடக்கியது எனலாம் அந்த வகையில் பல மாணவர்களது கல்வி செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு கல்வி செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன.

அந்த வகையில் பாடசாலைக்கு செல்லமுடியாது போனதுடன் அதிகளவான கல்விப் பெறுபேற்று மாற்றங்களும் பாடசாலை இடைவிலகல்களும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இலவசக் கல்வித் திட்டமானது சமூகப் பொருளாதார ரீதியாக வலுவிட்டலினை கொடுத்தாலும் இதற்கான வளங்கள் பெருந்தோட்டத்துறை மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் சில கிழக்கு கரையோரப் பகுதிகள் முதலான இடங்களில் பிரச்சினைக்குரியதாக இருக்கின்றது இதனால் இடமாற்றம், அரசியல் தலையீடுகள், ஆசிரியர் பற்றாக்குறை, தொண்டர் ஆசிரியர் நியமனங்கள், மாணவர்களுக்கேற்ற ஆசிரியரின் எண்ணிக்கை இன்மை, பணம் கொடுத்து மாணவர்களது அனுமதியை பேணுதல், விரும்பாத பாடத் தெரிவுகளை மேற்கொள்ளுதல், கற்கைக்காக அதிக பணம் செலவிடுதல் முதலான பல பிரச்சினைகளை கல்வி ரீதியாக எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கல்வி கற்கும் சூழலானது கல்விக்கு பொருத்தப்பாடு உடையதாக வேலை உலகுக்கு தயார்ப்படுத்துவதாக சிறந்த வருமானத்தை பெற்று தருவதாக கல்விக்கான வழிகாட்டலானது மாணவர்களுக்கான ஒழுக்கத்தை போதிப்பதாக காணப்பட வேண்டும். ஆனால் இன்று கல்வியின் பிரச்சனையானது வேலையின்மையிலும் கல்விக்கு ஏற்ற வேலையின்மையிலும் ஊதிய பற்றாக் குறையையும் ஆசிரியர் மாணவர்களுக்கு இடையிலான இடைவினையின் சீரற்ற விளைவையும் பெற்று தருகின்றது.

மாணவர் மத்தியிலான வன்முறைக் கலாச்சாரமானது இன்று அதிக அளவு காணப்படுவ துடன் மாணவர்கள் ஒழுக்க விழுமியங்களை பின்பற்றாது போகின்ற நிலையும் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் மத்தியில் போதை வஸ்து பாவனை ஆனது அதிகரித்த போக்கினை 2022 தொடக்கம் 2023 வரையான காலப் பகுதிகளில் காணப்படுவதை இலங்கையின் செய்தி வழங்கும் நிறுவனங்கள் உத்தியோகபூர்வமாக தங்கள் தளங்களில் வெளிப்படுத்தி உள்ளன. அவர்களை மையமாக வைத்து இயங்கும் வர்த்தக நிறுவனங்கள் மாணவர்களை இலக்கு வைத்து தமது வர்த்தகங்களை மேற்கொள்ளும் போதைப் பொருள் விநியோகஸ்தர்கள் என இலங்கையின் கல்வினை சீரழிக்கும் பல கூறுகள் வெளிப்பட்டு நிற்பதை காணமுடிகின்றது.

கல்விசார் பெரும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பாலியல் சமத்துவம், சிறுவர் பாதுகாப்பு, இளையோர் பாதுகாப்பு, உள்ளடங்களாக பல கூறுகள் பேணப்பட வேண்டும்.

உலகில் கல்விசார் பெரும் பிரச்சினைகளில் பாடசாலை இடைவிலகலானது முக்கியமான சவாலாக காணப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தில் பாடசாலை இடைவிலகல் 10.2% ஆகவும் ஸ்பானியாவில் 16 சதவீதமாகவும் காணப்படுகின்றது பால்நிலை ரீதியாக நோக்குமிடத்து உலகில் ஆண் மாணவர்களே அதிகம் பாடசாலை இடைவிலகுகின்றனர்.

உலகில் மாத்திரமன்றி இலங்கையிலும் பாடசாலை இடைவிலகலின் போக்கானது அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றது. இலங்கையில் 2020 ஆண்டில் கொரோனா தொற்று பரவல் தொடங்கியதில் இருந்து வடமாகாணத்தில் 14 முதல் 16 வயதுக்கு இடைப்பட்ட மாணவர் களின் பாடசாலை இடைவிடகல் அதிகரித்துள்ளது (www.Lanka news).

வட மாகாணத்தில் 2020 ஆம் ஆண்டில் வட மாகாணத்தில் 485 மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகியுள்ளார்கள். இது கடந்த ஆண்டு 105 ஆக குறைந்துள்ளது இலங்கையில் உள்ள மாவட்டங்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வறுமையிலும் கல்வி விதத்திலும் பின்தங்கிய மாவட்டமாக காணப்பட்டு வருகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வியின் போக்கை தீர்மானிப்பதில் போர்க்காலமும் அதன் பின்னர் தொடர்ந்த விளைவுகளும் ஒரு முன்னணி பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐந்து வயதுக்கு குறையாமலும் 16 வயதிற்கு மேற்படாமலும் உள்ள ஒரு பிள்ளை தனது கட்டாயக் கல்வியை கட்டாயமாக பூர்த்தி செய்யவேண்டும். ஆனால் இந்த போக்கினைமாற்றி பாடசாலை இடைவிலகலை தீர்மானிப்பதில் பல காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

அந்த வகையில் சமூக காரணிகளாக குடும்ப சூழல் அதாவது குடும்பத்தின் அங்கத்தவர்கள், பெற்றோரின் குற்றவியல் நடத்தைகள், பெற்றோரின் கல்வி அறிவின்மை, பெற்றோர்களின் புலம்பெயர்வு, ஒற்றை பெற்றோரியம், விவாகரத்து, பெற்றோரின் இழப்பு, பெற்றோரது நோய் நிலமை போன்றவையும் சமூக ஆதரவின்மை, தவறான வழி நடத்தல், போக்குவரத்து செலவு, போதை வஸ்து விற்பனை, வறுமை, கடன், குடும்ப பொருளாதார உணவு பாதுகாப்பின்மை, விலையேற்றம், சமூக வன் செயல்கள் போன்றவையும் காணப்படுவதுடன் பாடசாலை மாணவர் களின் இடைவிலகலில் செல்வாக்கு செலுத்தும் தனிநபர் காரணிகளாக பாடச்சுமை, போதை பொருள் பாவனை, மாணவரது ஆளுமைத்திறன், சமூக வலைத்தள பாவனை, பாடத்தெரிவு, நோய்நிலைமை, பதின்மவயது திருமணம், வன்குழுக்களுக்கு இடையிலான தொடர்பு, சுய அக்கறையின்மை, போன்றனவும் காணப்படுகின்றன.

பாடசாலைசார் காரணிகளாக ஒழுங்கற்ற நிர்வாகம், வளப்பற்றாக்குறை, ஆசிரிய-மாணவ இடைவினை, உடலியல் தண்டனை, பாடசாலை சூழல் முதலானவையும் காணப்படுவதுடன் பாடசாலை மாணவர்களின் இடைவிலகலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளால் ஏற்படும் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவுகளாக இளங்குற்ற நடத்தைகள், வேலையின்மை, வன்முறை, சிறுவர் ஊழியம், சமூகப் புறமொதுக்கல்கள், சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் போன்றவையும் காணப்படுகின்றன.

பாடசாலை மாணவர்களின் இடைவிலகலினால் உளவியல் பிரச்சனைகளாக தனிமை, விரக்தி, மறுப்பு, கவலை மற்றும் தாழ்வு மனப்பான்மை போன்றவையும் காணப்படுகின்றன. மேற்குறிப்பேட்டை காரணிகள் பாடசாலை மாணவர்களின் கல்வி செயல்பாடுகளில் பின்னடைவு ஏற்படுத்துவதற்கு தாக்கம் செலுத்துகின்றதுடன் அவர்களை இடைவிலகலிற்கு தூண்டுகின்றன.

## REFERENCE


1. Cairns, R. B., Cairns, B. D., & Neckerman, H. J. (1989). Early school dropout: Configurations and determinants. Child development, 1437-1452.
2. Rumberger, R. W. (1987). High school dropouts: A review of issues and evidence. Review of educational research, 57(2), 101-121.
3. கீதாவினி ஞானசிங்கம், et- al(2012), கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் ஓர் ஆய்வு. வசீமா அக்ரம், et-al (2018), அட்டாளைசசேனை பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களின் இடைவிலகலும் அதற்கான காரணங்களும், சம்புநகர் மற்றும் ஆலங்குளம் ஆகிய கிராமங்களை மையப்படுத்திய களஆய்வு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org